Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 329 பிலவ வருடம், புரட்டாசி மாதம் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை (17.09.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை - 09, 0115886187 - பக்கங்கள் 08

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## நக்கல் நமசிவாயம்

தமிழ் அரசியல் கைதிய சுட்டுப்போட்டிருந்தாலும் பொதுமன்னிப்பில உவர் வெளிய வந்திருப்பார் பாருங்கோ...





# அரிசி தட்டுப்பாடு அபாயம்!

### பெரும்பாலான ஆலைகளில் உற்பத்தி நிறுத்தம்

02



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 21 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, அக்கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தலைமையில் நேற்று (16) விசேட துஆ பிரார்த்தனை இடம்பெற்றது.

## பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு அவசர சீர்திருத்தங்களை மேற்கொள்க!

### சிரேஷ்ட பொருளாதார நிபுணர்கள் கூட்டாக கோரிக்கை

•நமது விசேட செய்தியாளர்

இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சிரேஷ்ட நிபுணர்கள், நிலையான சூழலை உருவாக்கும் பொருட்டு, அவசர சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பொருளாதாரத் துறைசார்ந்தோர் மற்றும் மிகப்பெரிய நிறுவனங்கள் சிலவற்றுக்கு தலைமைதாங்குவோருக்கிடையில் நடைபெற்ற இணையவழி... 02

## நாட்டின் உள்ளகப் பிரச்சினையை தீர்க்க வெளியகப் பொறிமுறை அவசியமில்லை

### வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கொலம்பகே திட்டவட்டமாக அறிவிப்பு

•யோ.தர்மராஜ்

நாட்டின் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, வெளியகப் பொறிமுறையொன்றின் தேவை ஒருபோதும் இல்லையென, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

அதேபோன்று, அவ்வாறான... 02




## திலீபன் நினைவேந்தலை அனுஷ்டிக்க நால்வருக்கு நீதிமன்றம் தடையுத்தரவு

•கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாநகரசபை மேயர் தியாகராசா சரவணபவன், தமிழரசுக் கட்சி இளைஞர் அணி செயலாளர் கிருஷ்ணபிள்ளை சேயோன் மற்றும் பேரின்பராசா ஜனகன், சுவீகரன் நிசாந்தன் ஆகிய நால்வருக்கு எதிராக தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை நினைகூருவதற்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (15) தடை உத்தரவு பிறப்பித்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.


தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திலீபனின் நினைவுகூரும் நடவடிக்கையை குறித்த நால்வரும் நேற்று முன்தினம் முதல் (15) எதிர்வரும் 26 ஆம்... 02

## மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் நந்தினி சேவியர் காலமானார்



நந்தினி சேவியர் எனும் புனைப் பெயருடன் இலக்கிய உலகில் நன்கறியப்படும் தேவசகாயம் சேவியர் திருகோணமலையில் வசித்து வந்த நிலையில் நேற்று (16) தனது 72ஆவது வயதில் தனது இல்லத்தில் காலமானார். இவர் 1949 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவிலில் பிறந்தார்.

பாடசாலைக் கல்வியை மட்டுவில் கல்வியல் சைவப்பிரகாச வித்தியாசாலை, மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி,... 02



அம்பாறை மாவட்டத்தில் மயில்களின் வருகையினால் வெற்றுக்காணிகள், வயல்வெளிகளில் உள்ள விச ஜந்துக்களின் நடமாட்டம் குறைந்துள்ளது.

## வெற்றிலை சின்னத்தை ஆராயும் மைத்ரி அணி

### விசேட கூட்டத்தில் பிரஸ்தாபிப்பு

•நா. தினுஷா

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் புதிய கொள்கைத் திட்டங்களுடன் வெற்றிலை சின்னத்தில் மீண்டும் கட்டியெழுப்ப, கூட்டணியின் தலைமைத்துவம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி, முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிரிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் ஒன்றுகூடியது.

சூம் தொழில்நுட்பத்தினூடாக... 02

## ஐ.நா.வுக்கு அளித்த முறைப்பாடுகளை இலங்கைக்கு ஒப்படைத்தமை ஆபத்து

### காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் அமைப்பு பச்லேவுக்கு கடிதம்

ஐ.நா. தன்னிடமிருக்கும் காணாம லாக்கப்பட்டோர் தொடர்பான முறையீடுகளை இலங்கை அரசிடம் ஏன் ஒப்படைத்தது? இது உறவினர்களுக்கு ஆபத்தானது எனக் குறிப்பிட்டு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் அமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லேவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையும் திட்டமிட்ட இன அழிப்பின் ஓர் அங்கம். வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அதன் கனதியை... 02



## உஷ்

அநுராதபுர சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்திய அதே இராஜாங்க அமைச்சர் செய்த இன்னொரு ஏடாகூடமும் வெளியாகியுள்ளது.

தினமும் இரவு அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு இரவுநேரங்களில் தொலைபேசி அழைப்பை எடுக்கும் அந்த அமைச்சர், சிறைச்சாலை அதிகாரிகளின் தொலைபேசியூடாக அங்கு சிறைவைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுடன் பேசுவாராம். சிறைக்கு பொறுப்பான அமைச்சர் என்று தொலைபேசிக்கு ரஞ்சன் பதிலளிக்கும்போது அவரை தூஷண வார்த்தைகளால் திட்டித் தீர்ப்பாராம் இந்த இராஜாங்கம்.

பல நாட்களாக நடந்த இந்த களேபரம் ,அநுராதபுர சிறைச்சாலை சம்பவத்தின் பின்னர் அம்பலத்திற்கு வந்துள்ளது. என்னதான் ஒரு பதவியை இராஜினாமா செய்தாலும், அரசுக்குள் மிக்க செல்வாக்கோடுதான் இருக்கிறாராம் அந்த இராஜாங்க அமைச்சர். ஊடகங்களில் வரும் செய்திகளைப் போல அவருக்கு அரசுக்குள் பெரிய அழுத்தங்கள் எதுவும் இல்லையாம்.



## லொஹானுக்கு எதிராக முறைப்பாடுகள் இல்லை

### அதனால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்கிறார் அமைச்சர் சரத்

•யோ.தர்மராஜ்

அநுராதபுர சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுத்ததை ஏற்றுக்கொண்டு பதவி விலகிய சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த குறித்து முறைப்பாடுகள் கிடைத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர்... 02

## பங்களாதேஷிலிருந்து அச்சுறுத்தலா? விமான நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு

### பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணைகள் ஆரம்பம்

விமான நிலையங்கள் மற்றும் அரச கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்தப்போவதாக அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பங்களாதேஷிலிருந்து கிடைக்கப்பெற்ற மின்னஞ்சலின் அடிப்படையிலேயே கட்டுநாயக்க மற்றும் மத்தல விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தல மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தளத்துக்கு கிடைக்கப்பெற்ற மின்னஞ்சல் காரணமாக இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 02

# அரச ஆதரவாளர்கள் எதையும் செய்யலாம் என்ற மனோபாவம் மேலோங்கியிருக்கிறது

## இராஜாங்க அமைச்சர் லொஹானின் செயற்பாடு குறித்து சி.வி. விசனம்



அரச ஆதரவாளர்கள் எதையும் செய்யலாம் தண்டனை கிடைக்காது என்ற மனோபாவம் தற்போது மேலோங்கி வருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயின் முறையற்ற செயற்பாடு குறித்து ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மூன்று விடயங்களை இவருடைய நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டியுள்ளன. ஒன்று குற்றங்கள் புரிபவர்களுக்கு தண்டனை கிடைக்கப் போவதில்லை என்ற மனோபாவம் வெளியாகியுள்ளது. அது தான் மிகக் கேவலமான ஒரு குற்றத்தைப் புரிந்துவிட்டு தமது பதவியை இராஜிநாமா செய்துவிட்டு எதுவும் நடக்காதது போல் சுதந்திரமாக இவர் திரிகின்றார்.

சில காலத்தின் பின்னர் வேறொரு துணை அமைச்சர் பதவி கிடைக்கலாம் என்ற திடமான நம்பிக்கை கூட அவருக்கு இருக்கலாம். இக் குற்றத்தைப் புரிந்தவர் ஓர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்றால் அவர் மீது சட்டம் பாய்ந்திருக்கும். அவர் கைதாகியிருப்பார். ஆனால் அரச சார்பானவர்கள் எதையும் செய்யலாம் தண்டனை கிடைக்காது என்ற மனோபாவம் தற்போது மேலோங்கி வருகின்றது.

இரண்டு - இந்த அரசாங்கத்தின் கீழ் அரச சார்பான அரசியல்வாதிகளுக்கு விதிகள், ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் என்று எதுவுமே கிடையாது என்பது நிதர்சனம். அவர்கள் நினைத்ததைச் செய்யமுடியும் அரச அலுவலர்கள் அவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும். கட்டுப்பாடின்றி சிறைச்சாலைக்குள் நுழையலாம். ஹெலிகொப்டரில் இரவில் பயணம் செய்யலாம். நன்றாகக் குடித்து விட்டுப்போய் சிறைக் கைதிகளை அவர்களின் கூண்டுகளிலிருந்து வெளியே வரச்செய்து அவர்களுக்கு எந்தத் தீங்கையும் விளைவிக்கலாம் என்றாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் கூட ஒருவர் முறைதவறி நடந்துகொள்வதாக தெரியவருகின்றது. இவர்களுக்கு மக்கள் உரிய நேரத்தில் தண்டனை வழங்குவார்கள்.

மூன்று - தமிழ் மக்களை இழிவுபடுத்துவதை எந்த சிங்கள அரசியல்வாதியும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. முஸ்லிம்களுக்கும் அண்மையில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலையகத் தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களும், மலையகத் தமிழ் மக்களும் சிங்களவர்களுடன் சேர்ந்தே இதுவரை காலமும் பயணித்து வந்தனர். இப்போது நிலைமை மாறியுள்ளது. எனவே பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் இடையே துருவமயமாக்கல் நடைபெறத் தொடங்கியுள்ளது.

லொஹான் ரத்வத்த உடனே கைது செய்யப்பட வேண்டும். உரிய விசாரணையின் பின் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படவேண்டும். உடனே சம்பந்தப்பட்ட சி.சி.ரி.வி. கெமெராக்கள் கையேற்கப்பட்டு பாதுகாப்பில் வைத்திருக்கப்பட வேண்டும். லொஹான் கைதுசெய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்கு பதியப்பட்டாலும் விசாரணையின் போது தமிழ் அரசியல் கைதிகள் சாட்சிகளாக உண்மை கூறினாலும் அவர்களின் சாட்சியம் பக்கச் சார்புடையதென்று கூறி அவரை விடுதலை செய்ய பல நீதிபதிகள் காத்திருக்கக்கூடும் எனத் தெரிவித்துள்ளார்.

# பத்தனை ஆற்றில் ஆணின் சடலம் மீட்பு

(பி.கேதீஸ் க.கிஷாந்தன்)

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தனை ஆற்றில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொட்டகலை ஹூட்டன் பகுதியை சேர்ந்த ஏ.தங்கவேல் (வயது 60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 9ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்ததாக திம்புள்ள -பத்தனை பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று இவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார். குறித்த சடலம் மரண பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் திம்புள்ள-பத்தனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ஐரோப்பிய ஒன்றிய விசேட குழு 27இல் வருகை

ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட குழுவொன்று எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கைக்கு வருகைத் தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்களை கொழும்பில் சந்திக்கவுள்ள இந்தக் குழு, வட கிழக்கு மாகாணங்களுக்கும் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இதன்போது தமிழ் அரசியல் தலைவர்களுடனும் சந்திப்புகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தொடர் நிறைவுக்குப் பின்னர் இந்தக் குழு இலங்கைக்கு வருகைத் தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லொஹானுக்குரிய மற்றுமொரு அமைச்சையும் பறிக்க வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. வேண்டுகோள்

நா. தினுஷா

அரசியல் கைதிகளின் பாதுகாப்பை அரசே உறுதிப்படுத்த வேண்டும். இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் செயற்பாடு கண்டிக் கத்தக்கதாகும். ஆகவே, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத் தொழில் இராஜாங்க அமைச்சு உள்ளிட்ட லொஹானிடமிருக்கும் சகல பதவிகளிலிருந்தும் அவர் நீக்கப்பட வேண்டும் என்பதுடன் அவரிடமுள்ள கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் நேற்று வெளியிட்ட காணொளியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெலிக்கடை மற்றும் அநுராதபுர சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு பொறுப்பை ஏற்று தான் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு பதவியை இராஜிநாமா செய்வதாக அறிவித்து லொஹான் ரத்வத்தேவினால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சை அவர் இராஜிநாமா செய்திருந்தாலும் இன்னுமொரு இராஜாங்க அமைச்சுக்கு பொறுப்பாக இருக்கிறார். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. லொஹான் ரத்வத்தேவுக்கு வழங்கப்பட்டுள்ள சகல பதவிகளிலிருந்தும் அவர் நீக்கப்பட வேண்டும்.

அவரின் பொறுப்பிலுள்ள கைத்துப்பாக்கியும் மீளப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிட்டால் இது பொது மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும். அதேபோன்று, லொஹான் ரத்வத்தே தொடர்பான சம்பவங்கள் தொடர்பிலும் உடனடியாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்னர் லொஹான் உள்ளிட்ட தரப்பினர் கைதுசெய்யப்பட்டு அவர்கள் தொடர்பில் நீதிமன்றத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆனால், இதுதொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரியவில்லை. சிறைக்கைதிகள் அரசாங்கத்தின் பொறுப்பில் இருப்பவர்கள். எனவே, அவர்களுடைய பாதுகாப்பை அரசே உறுதிப்படுத்த வேண்டும். ஆகையினால், இந்த பாரதூர செயற்பாடு தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

## அரிசி தட்டுப்பாடு...

***நமது விசேட செய்தியாளர்***

நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக பிரதான அரிசி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

அரிசி உற்பத்தியாளர்களை இலக்குவைத்து கடந்த சில வாரங்களாக அரசு செயற்பட்டதால் தாம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக அரிசி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேல்மாகாணத்தின் பிரதானமான அரிசி சந்தையான மரந்தகஹமுல சந்தையிலும் அரிசிக்கு தட்டுப்பாடு எழும் நிலைமை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நெல் தற்போது கொள்வனவு செய்யப்படும் விலையினை ஒப்பிடுகையில், அரசின் நிர்ணய விலைக்கு அரிசியை விற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மரந்தகஹமுல அரிசி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இதனால் மரந்தகஹமுல அரிசி ஆலைகளில் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மரந்தகஹமுல அரிசி சந்தையில் தற்போது நெல் கொள்வனவின்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நிலைமை தொடர்வதால் விரைவில் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

## பொருளாதார நெருக்கடியை...

கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு கடந்த 20 வருடங்களாக பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ளவில்லையெனத் தெரிவித்துள்ள கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் சிறிமல் அபேரத்ன, நீண்டகாலப் பிரச்சினைக்கு குறுகிய கால தீர்வுகள் குறித்து விசனம் வெளியிட்டுள்ளார்.

“நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் நுண்பாகப் பொருளாதாரத்தை சீராகப் பேணுவது அவசியம்” என சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொருளாதார உறுதிப்படுத்தலுக்கான திட்டங்களை செயற்படுத்துதல், நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்பு, பொது நிதி மேலாண்மை ஆகியவை குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இது ஒரு போர். இதிலிருந்து மீள்வதற்கு பெரும்பாலானோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும் என பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தெரிவித்துள்ளார்.

கலாநிதி சரத் ராஜபத்திரண, பேராசிரியர் சூரி ரத்னபால, கலாநிதி சுஜாதா கமகே, கலாநிதி நிஷான் டி மெல், பேராசிரியர் பிரேமா சந்திரா அத்துகோரள உள்ளிட்ட நிபுணர்கள் பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெற்றிலை சின்னத்தை...

இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் மற்றும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அசங்க நவரத்ன உள்ளிட்ட கட்சி தலைவர்கள் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் தேச விமுக்தி ஜனதா கட்சியின் பீ.எம்.பொடிஅப்புஹாமி ஆகியோர் நினைவுகூரப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு புதிய கொள்கை திட்டமொன்றை தயாரிப்பதற்கு இந்த கலந்துரையாடலின்போது யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த கொள்கைத் திட்டத்துக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய யோசனைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

புதிய கொள்கைத் திட்டங்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிலை சின்னத்தில் புதிதாகக் கட்டியெழுப்ப வேண்டிய முறை தொடர்பிலும் இதன்போது மேலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## நாட்டின் உள்ளகப்...

பொறிமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் உள்ளக சட்டக் கட்டமைப்பின் கீழ், நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படும் என்றார்.

ஜனாதிபதி ஊடக மையத்தால் ஏற்பாடு செய்யப்படும் ஊடகச் சந்திப்பு, வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று (16) நடத்தப்பட்ட போது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். ‘ஜெனீவா குற்றச்சாட்டுகள், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடர் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை’ எனும் தலைப்புகளின் கீழ், நேற்றைய ஊடகச் சந்திப்பு இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இம்முறை கூட்டத்தொடரின் போது, அதன் ஆணையாளர் நாயகம் மிச்செல் பெச்லேவால் முன்வைக்கப்பட்ட வாய்மொழி அறிக்கையின் போது, காணாமல் போனோருக்கு நட்டஈடு வழங்கல், தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல், பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தைத் திருத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்திருந்தமை மகிழ்ச்சிக்குரியதென்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

மனித உரிமைகளுக்குள் மறைந்திருந்து, இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையீடு செய்வதை, சீனா, ரஷ்யா, ஜப்பான், வடகொரியா, தென்கொரியா, பாகிஸ்தான், ஈராக், வெனிசியூலா உள்ளிட்ட 15 நாடுகள் எதிர்த்து, இலங்கையுடன் கைகோர்த்து நின்றன. மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தைப் பின்பற்றல், பயங்கரவாதத்தை ஒழித்தல் போன்ற விடயங்களில் அரசாங்கம் கொண்டுள்ள பொறுப்புணர்வு, அவர்களின் விசேட பாராட்டுக்கு இலக்காகியுள்ளன என்றும், அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

வலயத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, இலங்கை அமைதியான நாடாக விளங்குகிறது. பயங்கரவாதத்தை ஒழித்தல், அடிப்படைவாதத்தைப் பரப்பும் தீவிரவாதத்தை ஒழித்தல் போன்றே, நாட்டு மக்களிடையே சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பல் போன்றவற்றில் இலங்கை முன்னிலையில் இருப்பதோடு, இது விடயங்களில் கடந்த இரண்டு வருடக் காலப்பகுதிக்குள் இலங்கை செயற்பட்ட விதம் தொடர்பிலும் சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது, சீரமைக்கப்பட்ட கொள்கையாகும் என்று எடுத்துரைத்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், அந்தக் கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டு, அதிகாரப் போட்டிகளில் சிக்கிக் கொள்ளாது முன்னோக்கி நகர்வதே இலங்கையின் நோக்கமென்றும் இந்நாட்டின் அமைவிடம் தொடர்பில் அதிக அவதானத்துடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை எதிர்கொள்வதற்கான இலங்கையின் தயார்ப்படுத்தல்கள் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த செயலாளர் ஜயநாத் கொலம்பகே, அரசாங்கத்தின் கொள்கை மிகத் தெளிவாக இருக்கின்றது என்றும் அது தொடர்பில், உலகின் பல நாடுகளுக்கு, கடந்த மாதங்களில் பல்வேறுபட்ட அறிக்கைகள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றின் பிரதிபலனாகவே, அந்நாடுகளின் ஒத்துழைப்பு இலங்கைக்கு தற்போது கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு போன்றன, இது விடயத்தில் பாரிய ஒருங்கிணைப்புடன் செயலாற்றியிருந்தன என்றும் அவர் எடுத்துரைத்தார்.

“கொவிட் சவாலை வெற்றிகொள்வது மற்றும் எதிர்காலத் திட்டங்கள்” என்ற உள்ளடக்கத்துடனேயே, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் இம்முறை பங்கேற்கவுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து நாடுகளினதும் அரச தலைவர்களதும் உரைகள் அமையவுள்ளன என்று, இந்த ஊடகச் சந்திப்பில் விசேட உரையாற்றிய ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

தத்தமது நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திகள் தொடர்பான இணக்கப்பாடுகளுடன், கொரோனா சவாலை வெற்றிகொள்வதற்கு, இம்முறை கூட்டத்தொடர் பாரிய சந்தர்ப்பத்தை வழங்குமென்றும், அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியில் காணப்படும் பல்வேறு தவறான அபிப்பிராயங்களைச் சீர்செய்வதற்கும், இம்முறை ஐ.நா கூட்டத்தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திக்கொள்வார் என்று தான் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## திலீபன் நினைவேந்தலை...

திகதிவரை மேற்கொள்ள இருந்ததாக காத்தான்குடி பொலிஸ் நிலைய புலனாய்வு உத்தியோகத்தர்களால் நம்பகரமான தகவல் கிடைத்துள்ளதாகவும் இந்நிகழ்வு நடந்தால் இதற்கு எதிரானவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட வாய்ப்புள்ளதாலும் நாட்டில் தற்போது கொரோனா நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதன் காரணமாகவும் இந்நிகழ்வுக்கு தடை உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பொ.ப.கஜநாயக்க மன்றிற்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளார்.

இதன் பிரகாரம் 1979 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் பிரிவு (106)1 கீழ் பொலிஸார் கோரியவாறு தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த நீதிமன்ற தடையுத்தரவை உரியவர்களிடம் உத்தியோகபூர்வ கடிதம் மூலம் அறிவிக்க நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

## மூத்த எழுத்தாளர்...

வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். அதன் பின்னர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்றார்.

அவர் 1967 இலிருந்து எழுதிவருகிறார். கவிதை, சிறுகதை, நாவல், பத்திரிகை, விமர்சனக் கட்டுரை ஆகிய துறைகளில் பல்துறை ஆளுமையாக விளங்கியவர். கலை இலக்கியத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தவர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனச்சார்பு) இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவரும் இடதுசாரி சிந்தனையாளருமாவார்.

இதுவரை நான்கு நூல்களை வெளியிட்டுள்ள இவர் பல கௌரவங்கள், விருதுகளைப் பெற்றவராவார். அந்தவகையில், 2013ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் கலாபூஷணம் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா.வுக்கு அளித்த...

நீர்த்துப்போகச்செய்யவே எண்ணிக்கையைக் குறைக்கும் விசமத் திட்டத்தில் ஈடுபடுகிறார். இதை மனித உரிமைகள் ஆணையாளர் ஆமோதிக்கக் கூடாது எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2000-2021 வரையான இருபது வருட காலப்பகுதியில் ஏறத்தாழ ஆறாயிரம் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய விபரக் கோவையைத் தற்போது ஒப்புநோக்கி உறுதிப்படுத்தி வெளியிட இருப்பதாக இலங்கை அரசின் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஜெனீவா ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரின் வாய்மூல அறிக்கைக்கு முன்பதாகத் தகவல் வழங்கியிருக்கிறார்.

அதுவே குறைந்த ஒரு எண்ணிக்கை. அதைக் கூட நான்காயிரத்துக்கும் அல்லது அதற்கும் குறைவாகக் காட்ட முனையும் ஒரு கண்துடைப்பு நாடகத்தை அவர் ஆரம்பித்திருப்பதை எவ்வாறு மனித உரிமை உயர்ஸ்தானிகர் ஆமோதிக்க முடியும்?

இலங்கை அரசு திட்டமிட்ட இன அழிப்பையே வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரிந்துள்ளது. அதன் ஓர் அங்கமாகவே கடந்த இருபது வருடங்களுக்குள் மாத்திரம் குறைந்தது 15 ஆயிரம் தமிழர்கள் அரச படைகளினாலும் அவர்களால் இயக்கப்பட்டவர்களாலும் வலிந்து காணாமலாக்கப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிகள் என்பது மட்டுமல்ல 95 வீதமானோர் 16 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் ஆவர். இது ஒரு திட்டமிட்ட இன அழிப்புச் செயல். இந்தத் தொகையைக் குறைத்துவிட இலங்கை அரசு முயற்சிக்கிறது. இதை எவ்வாறு பீரிஸை ஆமோதிப்பதன் மூலமும் காணாமல் போனோர் ஆட்கள் பற்றிய அலுவலகப் பொறிமுறையை வரவேற்பதன் மூலமும் ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகர் அங்கீகரிக்கமுடியும்?

இதற்கும் அப்பால், ஆறுமாதங்களுக்கு முன்னர் உள்ளகப் பொறிமுறை படுதோல்வி கண்டுவிட்டது, எனவே ஐ.நா. உறுப்புரிமை நாடுகள் குற்றவாளிகளை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்று போன்ற சர்வதேச விசாரணைப் பொறிமுறைகள் ஊடாக விசாரிக்க ஆவன செய்யவேண்டும் என்று கடுமையாகப் பிரேரித்து விட்டு, அடுத்த சில மாதங்களுக்குள் தீவில் மனித உரிமைகள் சீரழிந்து செல்லும் நிலையிலும் கொழும்பு அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறையை ஆமோதிக்கும் நிலையை உயர்ஸ்தானிகர் எவ்வாறு கைக்கொள்ளலாம்?

இலங்கை அரசிடம் ஐ.நா. தன்னிடமிருக்கும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான முறையீடுகளை ஏன் ஒப்படைத்தது? இது உறவினர்களுக்கு ஆபத்தானது. இலங்கையின் வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை முற்றாக அகற்றவைத்து, ஐ.நா. மேற்பார்வையில் இங்கு பாதுகாப்பை உறுதி செய்தால் மாத்திரமே காணாமலாக்கப்பட்டோரின் விபரங்களை முழுமையாகத் திரட்டமுடியும்.

காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி சர்வதேச மட்டத்திலான சுயாதீன விசாரணை மூலம், அதுவும் இன அழிப்பு குறித்த பார்வையுடனான விசாரணைக்கு உள்ளடக்கப்பட்டதாக, மியன்மார் மற்றும் சிரியா போன்ற நாடுகளுக்குக் கையாண்ட அதியுச்ச நிகழ்ச்சி நிரலுக்குள் வைத்து அணுகப்பட வேண்டும்.

எனவே, மனித உரிமைப் பேரவையின் அதியுச்ச நிகழ்ச்சி நிரல் நான்குக்குள் இலங்கையைக் கொண்டுவந்து அடுத்தகட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் என்று தீர்க்கமாகக் கோருகிறோம். இன அழிப்பு குறித்த உண்மையைக் கண்டறியும் பணிக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்றும் கோருகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பங்களாதேஷிலிருந்து...

விமான நிலையம் மற்றும் அரச கட்டடங்கள் மீது எதிர்வரும் 20 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்படும் என்றும் தாம் குறிப்பிடும் நான்கு நபர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மின்னஞ்சல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சந்தேகநபர்கள் விமான நிலைய வலைத்தளத்திலிருந்து அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக தரவுகளைத் திருடி இதைச் செய்திருக்கலாம் என்று உளவுப் பிரிவினர் சந்தேகிப்பதாகவும் கூறப்படுகிறது.

பங்களாதேஷ் இராணுவத்தின் இணையதளம் முடக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலமே குறித்த மின்னஞ்சல் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் கட்டுநாயக்க மற்றும் மத்தல விமான நிலையங்களில் அவசரகாலத்தில் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் முதல் ஒத்திகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மின்னஞ்சல் விவகாரம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## லொஹானுக்கு எதிராக ...

அட்மிரல் சரத் வீரசேகர ‘தமிழன்’ நாளிதழுக்கு நேற்று (16) தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் பதவி விலகிய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பது குறித்து வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

துப்பாக்கிமுனையில் கைதிகளை அச்சுறுத்திய தவறை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர் தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்துள்ளார். எனினும், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பல தரப்பினரும் கருத்து தெரிவிக்கின்ற போதிலும் குறித்த சம்பவம் தொடர்பாக அவர் மீது முறைப்பாடு செய்யப்படும் போதே அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், இதுவரை அவர் மீது எவ்வித முறைப்பாடுகளும் முன்வைக்கப்படவில்லை.

இதேவேளை, அவரை கைதுசெய்யுமாறு சில அரசியல்வாதிகள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர். ஆனால், அவர்கள் முறைப்பாடுகள் எதனையும் செய்யவில்லை. ஒருவேளை அவர்கள் முறைப்பாடு செய்தால் பதவி விலகிய இராஜாங்க அமைச்சரை அழைத்து விசாரணைக்கு உட்படுத்த முடியும்.

மேலும், அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு போன்று சில முக்கிய வியாபாரிகளுக்கும் அனுமதிப்பத்திரமுடைய துப்பாக்கிகள் வழங்கப்படுகின்றன. ஆனால், அதனை அவர்கள் தங்களுடைய பாதுகாப்புக்கு மாத்திரமே பயன்படுத்தமுடியும். அதனைத் தவறாக பயன்படுத்தினால் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்க எடுக்கப்படும் என்றார்.

# இன்றைய ராசி பலன்

நாள்: 17.09.2021 வெள்ளி – புரட்டாசி 1

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| | | |
|---|---|---|
| நட்சத்திரம்: திருவோணம் | சுகர்மம் | காலை 8.08- 18.09.2021 |
| அ.கா 4.08-18.09.2021 | இரவு 8.21- 18.09.2021 | காலை 6.54 வரை |
| அதிகாலை 3.36 வரை | மாலை 6.25 வரை | முற்கரணம்: பத்திரை |
| | திதி: பூர்வ பட்ச ஏகாதசி | காலை 8.07 வரை |
| யோகம்: அதிகண்டம் | காலை 8.08 வரை | பிற்கரணம்: பவம் |
| இரவு 8.21 வரை | பூர்வ பட்ச துவாதசி | காலை 8.07- இரவு 7.28 |

**சுப நேரங்கள்**
காலை 6.04 - 7.29
மாலை 4.36 - 6.05

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
காலை10.31 - பி.ப12.02

**குளிகை காலம்**
காலை 7.30 - 9.01

**எமகண்ட காலம்**
மாலை 3.03 - 4.34

**துர்முகூர்த்தம்**
காலை 8.26 - 9.15
பிற்பகல் 12.29 - 1.18

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி

நற்பவி நற்பவி

**மேடம்**
வணிகத்தில் புதிய பங்குதாரர்கள் உருவாகலாம். காணி/வீடு சம்பந்தப்பட்ட வர்த்தகம் இலாபம் தரும். நண்பர்கள் மற்றும் அன்புக்குரியவர்களால் மகிழ்ச்சி உண்டாகும்.

**ரிஷபம்**
பணிகளில் பிரச்சினைகள் உண்டாகலாம். வழக்கு விடயங்களில் சாதகமான நிலை உண்டாகலாம். வீட்டின் சூழ்நிலை மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்**
தம்பதியரிடையே மன வருத்தம் உண்டாகலாம். வேலைத்தளங்களில் நிறைவேறாத பணிகள் கவலை தரலாம். பணிகளில் சில சிக்கல்களும் ஏற்படலாம்.
சந்திராஷ்டமம்: திருவாதிரை நட்சத்திரத்திற்கு இரவு 9.43 வரை, புனர்பூசம் நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு இரவு 9.43 - 18.09.2021 மாலை 3.26 வரை.

**கடகம்**
வணிக பயணங்களில் நன்மை கிடைக்கலாம். புதிய வேலைகளின் துவக்கம் ஏற்படலாம். வசதி நிலை உயரும். காணி/ வீடு தொடர்பாக தீர்மானம் உருவாகலாம்.
சந்திராஷ்டமம்: புனர்பூசம் நட்சத்திரம் பாதம் 4க்கு 18.09.2021 பி.ப 3.26 - இரவு 9.23, பூசம் நட்சத்திரத்திற்கு 18.09.2021 இரவு 9.23- 19.09.2021 இரவு 9.24 வரை.

**சிம்மம்**
பணிகளில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு உற்சாகம் தரும். இல்லத்தில் உல்லாசங்கள் ஏற்படலாம். சில பிரச்சினைகள் நீங்க துவங்கும். எண்ணங்களை நேர்மறையாக வைத்திருப்பது நன்மை.

**கன்னி**
கூட்டு தொழிலில் இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். வாகனங்களை கையாளுவதில் கவனம் தேவைப்படலாம். உடல் நலத்திலும் கவனம் தேவைப்படலாம்.

**துலாம்**
ஊடகத் துறையில் இருப்பவர்களுக்கு வேலைகள் அதிகரிக்கும். பொறாமை எண்ணங்களை நீக்குவது நன்மை. வணிகத்தில் புதிய நல்ல நிலை தோன்றும்.

**விருச்சிகம்**
வேலைத்தளங்களில் புதிய மாற்றங்களும் மேலதிக பொறுப்புகளும் ஏற்படலாம். பண விடயங்களில் கவனம் தேவை. மகிழ்ச்சி தரும் பயணங்கள் உண்டாகலாம்.

**தனுசு**
பெற்றோரை மதிப்புடன் பேணுவது பிதுர் ஆசி கிடைக்க பெறலாம். தொழில்நுட்ப பணிகளில் சில பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிடலாம். தம்பதியரிடையே சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். இறை தியானம் பிரச்சினைகளை குறைக்கும்.

**மகரம்**
வணிகத்தில் எதிர்பார்த்த இலாபங்கள் உருவாகலாம். தம்பதியருக்கு ஆன்மீக பயணங்கள் ஏற்படலாம். மன அமைதி உண்டாகும்.

**கும்பம்**
நிதி நடவடிக்கைகளில் அதிக கவனம் தேவைப்படலாம். காதலர்களுக்குள் உறவின் நிலையில் சிறிய பிரச்சினை தோன்றலாம். பணிகளில் திறமையான முயற்சியிலும் பலன்கள் கிடைக்காது இருக்கலாம். இறையருளால் பிரச்சினைகளை குறைத்து கொள்ளலாம்.

**மீனம்**
காணி/வீடு வியாபார இலாபங்கள் அதிகரிக்கும். தீர்வுகள் உருவாக்கலில் சில சிக்கல்கள் தோன்றலாம். மாணவர்களின் கல்வி நிலை மேம்படும். சில நல்ல விருப்பங்கள் நிறைவேறலாம்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,97,805 | 57,398 | 4,28,590 | 2,314 | 11,817 |



*அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அரசியல் கைதிகளை சந்திப்பதற்காக நேற்று (16) அநுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்தார். அரசியல் கைதிகளை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே துப்பாக்கி முனையில் மிரட்டிய சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்படும் என்றும் இதன்போது உறுதியளித்தார்.*

# வரணியில் அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் மீட்பு!



வரணி, குடமியன் காட்டுப் பகுதியிலிருந்து அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த வெடிப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இதன்போது கிளைமோர், கப்டன் பவான் (ஐயா) – 99 எனும் வாகன தகர்ப்பு வெடிகுண்டு என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது மீட்கப்பட்ட வெடிபொருட்கள் அதிசக்தி வாய்ந்தவை எனவும் சில நாட்களுக்கு முன்னர் இந்த காட்டுப் பகுதிக்குள் கொண்டு வந்து மறைத்து வைத்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.





# கொரோனாவால் பாதிக்கப்பட்ட யாசகர்களுக்கு அம்பாறையில் நிவாரணம்

(பாறுக் ஷிஹான்)

கொரோனா அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாசகர்களுக்கு இரவு வேளை உணவுப் பொதிகள், கம்பளி போர்வைகள் சாய்ந்தமருது முபாரக் டெக்ஸ் குழுமத்தின் நிறைவேற்று பணிப்பாளரால் விநியோகிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிராந்தியத்தில் பொது இடங்களில் தற்போது கொரோனா தொற்று காரணமாக பொதுமுடக்கம் அரசினால் விதிக்கப்பட்டுள்ள நிலையில், இங்குள்ள யாசகர்கள் பலர் உணவின்றியும் உறக்கமின்றியும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனைக் கருத்தில்கொண்டு அப்பகுதியில் உள்ள ஊடகவியலாளர் குழு மேற்கொண்ட வழிகாட்டலில், சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவரும் சாய்ந்தமருது



முபாரக் டெக்ஸ் குழுமத்தின் நிறைவேற்று பணிப்பாளருமான எம்.எஸ்.எம்.முபாறக் தலைமையில் நேற்று முன்தினம் (15) நள்ளிரவு, இப்பகுதியிலுள்ள யாசகர்களுக்கு உணவு உட்பட கம்பளி போர்வைகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த மனிதாபிமானப் பணியினை ஊடகவியலாளர்களுடன் இணைந்து அவர் அப்பகுதி யாசகர்களுக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் புதிதாக 67 பேருக்கு தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் புதிதாக மேலும் 67 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனையின் அறிக்கைகள் நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதற்கமைய, வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய சுகாதாரப் பிரிவுகளிலுள்ள 67 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றுக்குள்ளானவர்களை கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் நால்வர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். நெளுக்குளம், கோவிற்குளம், பம்பைமடுப்பகுதியில் அமைந்துள்ள காப்பகத்தில் இருவர் என அந்தப் பகுதியினை சேர்ந்த நால்வர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இறந்தவர்களின் உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





*புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையங்களில் தள்ளுவண்டிகளில் பொருட்கள் நேற்று ஏற்றிச்செல்லப்பட்டதையும் தெமட்டகொட பிரதேசத்தில் ஏற்பட்ட வாகன நெரிசலையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)*

# அநுராதபுரத்துக்கான சகல வீதி அபிவிருத்தி பணிகளையும் விரைவாக நிறைவு செய்க

## நெடுஞ்சாலை அமைச்சர் அறிவிப்பு



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

வட மத்திய மாகாண ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட அனைத்து வீதி அபிவிருத்தித் திட்டங்களையும் விரைவாக நிறைவு செய்ய வேண்டுமென நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்த வீதிகள் எதுவும் கடந்த நல்லாட்சியில் நிர்மாணிக்கப்படவில்லை. கடந்த நல்லாட்சி அரசாங்கம் இந்த வீதிகளின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பது ஒருபுறமிருக்க, எந்த வேலையும் செய்யாமல் மக்களை அப்பட்டமாக ஏமாற்றியது. ஆனால் தற்பொழுது அமைச்சரவை அங்கீகாரத்துடன் தான் இந்த வீதி அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட மத்திய மாகாண ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அநுராதபுர மாவட்டத்தில் 27 கிலோ மீற்றர் நீளமான தலாவ -கெக்கிராவ வீதி (B 213), 7 கிலோ மீற்றர் நீள கெக்கிராவ- கணேவல்பொல வீதி (B212) மற்றும் 45 கிலோ மீற்றர் நீள கணேவல்பொல - தச்சிஹல்மில்லேவ வீதி (B133) என்பன அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

6 ஆயிரத்து 745 மில்லியன் ரூபா செலவில் 82 கிலோ மீற்றர் நீளமான வீதி நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# குடிநீரின்றி அவதிப்படும் ராத்தங்கொட மக்கள்

(கம்பளை நிருபர்)

நுவரெலியா, ஹங்குராங்கெத்த பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஹேவாஹெட்ட ராத்தங்கொட பகுதியில் வாழும் 60 குடும்பங்கள் குடிநீர் வசதியின்றி அல்லல்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இப்பகுதியில் குறிப்பிட்ட சில காலங்களாக சுமார் 25 குடும்பங்கள் வரையே இருந்துள்ளன. அவர்கள் ஆரம்பத்தில் ஊற்றிலிருந்தே தமக்கான குடிநீரைப் பெற்று வந்துள்ளனர்.

காலப்போக்கில், குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் நீருக்கான தேவையும் அதிகரித்துள்ளது. இதனால், ஊற்றிலிருந்து வரும் நீர்போதுமானதாக இல்லை. வேறு வழியில்லாததால் இருப்பதை கொண்டு நெடுநாட்களாக இப்பகுதி மக்கள் வாழ்ந்து வந்தனர்.

ஆனால், தற்போது ஊற்றிலிருந்து நீர் உரியவகையில் வருவதில்லை எனவும், இதனால் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குகூட பெரும் சிரமமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே, தமக்கான குடிநீர்த் தேவையை ஏற்படுத்திக்கொடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் ராத்தங்கொட பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# அமெரிக்கா இலங்கைக்கு 40 மில்லியன் டொலர் நிதியுதவி

சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறைக்கு ஊக்கமளிப்பதற்கும், பெண் தொழில்முனைவோருக்கு உதவி செய்வதற்கும், அமெரிக்கா 80 வங்கிக்கு 40 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கியுள்ளது. இந்த தொகையை நேற்று உத்தியோகபூர்வமாக அமெரிக்கா வழங்கி வைத்தது.

இக்கடன் தொகையானது, சர்வதேச முதலீடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, NDB வங்கி, DFCC வங்கி மற்றும் NDB வங்கி உள்ளிட்ட வங்கிளுக்கு அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் வழங்கும் 26 மில்லியன் டொலர் நிதியின் ஒரு பகுதியாகும்.

805 வங்கியானது, இலங்கை முழுவதுமுள்ள இறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு 5 இலட்சம் ரூபா முதல் 1 மில்லியன் ரூபா வரையான ஆயிரத்து 400 இற்கும் அதிகமான கடன்களை வழங்க இந்த 40 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தும். DFC இன் 2ஓ மகளிர் முன்முயற்சியின் ஒரு அங்கமாக, அக்கடன்களில் ஆகக்குறைந்தது நாற்பது வீத பெண்களுக்குச் சொந்தமான அல்லது பெண்களை வலுவூட்டும் ஒரு தயாரிப்பு அல்லது சேவையை வழங்குகின்ற வர்த்தகங்களுக்கு வழங்கப்படும். அவற்றுள் பல கடன்கள் உலகளாவிய கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை வர்த்தகங்களுக்கும் உதவிசெய்யும்.

ஒரு தனித்துவமான சமூக விலகலைப் பின்பற்றி நேற்று இடம்பெற்ற விழாவில், இந்த நிதியினை குறியீட்டு ரீதியில் வழங்குகையில் இலங்கை மற்றும்



மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் கருத்து தெரிவிக்கையில்,

இந்த நிதியானது, இலங்கையிலுள்ள இறு மற்றும் நடுத்தர வர்த்தகங்களுக்கு பெருந்தொற்றுக்குப் பின்னரான பொருளாதார மீட்சியை நோக்கிய அவர்களது பயணத்தில் உதவுவது மட்டுமன்றி, அது இலங்கைப் பெண்கள், அவர்களது வர்த்தகங்கள் வளர்வதற்கு அனுமதிக்கும் நிதி அணுகலைப் பெற்றுக்கொள்ளவும் உதவும். வலுப்படுத்தப்பட்ட பெண்கள் எந்தவொரு அபிவிருத்தியடையும் பொருளாதாரத்திலும் ஒரு முக்கிய அங்கமாக உள்ளனர். இந்நாட்டுப் பெண்கள், அவர்கள் வெற்றிபெறுவதற்குத் தேவையான கருவிகள் மற்றும் வளங்களைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதற்கு இலங்கைப் பங்குதாரர்களுடன் தொடர்ந்து பணியாற்ற எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, செப்டெம்பர் 17ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# உடனடித் தேவையான பொருளாதார சீர்திருத்தம்!

இலங்கை, அதன் வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதன் காரணமாக, அதிலிருந்து மீள்வதற்கு அவசரமாக சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் நிலையான சூழலை உருவாக்கும் பொருட்டு, அவசரமானதும் நம்பகமானதுமான பொருளாதார சீர்திருத்தங்கள் அவசியமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொருளாதாரத்துறை சார்ந்தோர் மற்றும் மிகப்பெரிய நிறுவனங்கள் சிலவற்றுக்கு தலைமைத்துவம் வழங்குவோருக்கிடையில் நடைபெற்ற இணையவழி கலந்துரையாடல் ஒன்றில் இந்த விடயம் மிக அழுத்தமாக முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நுண்பாகப் பொருளாதார முறைமையை சீராகப் பேணுவதன் அவசியம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது நிபுணர்கள் முன்வைத்த சில விடயங்கள் வருமாறு,

★ இலங்கை அரசு சுமார் 20 வருட காலமாக கட்டமைப்புடன் கூடிய பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ளவில்லை. அவ்வாறு சீர்திருத்தங்களை செயற்படுத்தத் தவறியமையும் தற்போதைய பொருளாதாரத்தின் ஸ்திரமற்ற தன்மைக்கு காரணமாகும்.

★ இது தொடர்பில் கொள்கை, பரிந்துரைகளை பல ஆண்டுகளாக முன்வைத்து வந்தபோதிலும் அரசாங்கம் அதனைச் செயற்படுத்த ஆர்வம் காட்டவில்லை.

★ அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் காத்திரமான நகர்வுகளை முன்னெடுக்கலாம்.

★ நாடு என்ற ரீதியில் எதிர்காலத்தைக் குறித்து சிந்திக்க வேண்டியது அவசியமாகும். கடன்பட்டு பசியால் வாடுவதற்குப் பதிலாக, கடனிலிருந்து எவ்வாறு மீள்வது என்பதை ஆராய வேண்டும்.

★ இது ஒரு போர். இதிலிருந்து விடுபடுவதற்கு குறைந்தபட்ச திட்டங்களாவது முன்வைக்கப்பட வேண்டும்.

★ முக்கிய துறைகளை அடையாளங்கண்டு நம்பிக்கைமிக்க பொருளாதாரத்தை கட்டியெழுப்ப திட்டங்கள் முன்மொழியப்பட வேண்டும்.

★ சிறந்த பொருளாதார விளைவுகளைப் பெறுவதாயின் அதனை எளிதாக்குவதற்கு அரசியல் சீர்திருத்தங்கள் அவசியமெனின் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் போன்றவை கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதேவேளை, நீண்டகாலப் பிரச்சினைக்கு குறுகியகால தீர்வுகள் தேடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார உறுதிப்படுத்தலுக்கான திட்டங்களை செயற்படுத்துதல், நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்பு, பொது நிதி மேலாண்மை ஆகியவை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் நிபுணர்களின் இவ்வாறான கலந்துரையாடல் வரவேற்கத்தக்க விடயமாகும். அத்துடன் பொருளாதாரத்தை ஸ்திரமாகப் பேணுவதற்கு நிபுணர்களால் முன்வைக் கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். சுகாதாரத் துறை தொடர்பாக அதுசார்ந்த நிபுணர்கள் அரசாங்கத்துக்கு விடுத்த எச்சரிக்கை கண்டுகொள்ளப்படாமை காரணமாக நாடு எவ்வாறான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பது கண்கூடு.

அதேபோல் பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளையும் பொருட்படுத்தாமல் மேலும் இக்கட்டான நிலைக்கு நாடு தள்ளப்படாதிருக்க நடவடிக்கைகள் அவசியமாகும்.

இந்த நாட்டின் மீது, பொருளாதாரத்தின் மீது அக்கறைகொண்ட நிபுணர்களின் கருத்து தொடர்பில் நிதியமைச்சு அவதானம் செலுத்த வேண்டும். இருபது வருடங்களாக ஸ்திரத்தன்மை பேணப்படாமையும் தற்போதைய நெருக்கடிக்குக் காரணம் என அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அவ்வாறாயின், அதே தவறு மீண்டும் இடம்பெறாது என்பதை தற்போதைய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.




# பாக்கு நீரிணையில் சீனா!

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மீறி வட எல்லையில் இந்தியாவுக்குள் நுழைய முடியாத சீனா, புதியதொரு உத்தியைக் கையில் எடுத்திருக்கிறது. லடாக் பகுதியிலும் வடகிழக்கு எல்லைப் பகுதியிலும் இந்திய இராணுவம் சீன இராணுவத்தைத் தடுத்து நிறுத்தும் வல்லமை பெற்றிருப்பதால், தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளை குறிவைத்து இலங்கையைத் தனது தளமாக்க முனைந்திருக்கிறது.

போர் மூளுமானால் இந்தியாவை முற்றுகையிடுவதற்கு வசதியாக வங்கதேசத்தின் சிட்டகொங், இலங்கையின் கொழும்பு, பாகிஸ்தானின் க்வாதர் ஆகிய மூன்று துறைமுகங்களிலும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் சீனா வெற்றியீட்டியிருக்கிறது. போதாக்குறைக்கு ஈரானுடனான நட்புறவை வலுப்படுத்தி, இந்திய உதவியுடன் அமைக்கப்பட்ட சாபஹார் துறைமுகத்தையும் தன்வயப்படுத்தும் முயற்சியில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றிருக்கிறது.

ஏடன் வளைகுடாவில், செங்கடலில் ஆபிரிக்காவையொட்டி அமைந்திருக்கும் ஜிபூட்டியில் தனது இராணுவத் தளத்தை அமைத்துக் கொண்டிருக்கிறது சீனா. அதன் மூலம் ஆபிரிக்கா, இந்து மகா சமுத்திரம், தெற்காசியா ஆகிய மூன்று பகுதிகளிலும் தன்னுடைய கடல் ஆதிக்கத்தை உறுதிப்படுத்த முற்பட்டிருக்கிறது.

சீனாவின் இதுபோன்ற நீக்கங்களால்தான் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளுடன் இணைந்து தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த 'க்வாட்' அமைப்பில் அங்கம் வகிக்கிறது இந்தியா.

இப்போது சீனாவின் கவனம் முழுவதும் இலங்கையில் குவிந்திருக்கிறது. இந்தியாவிலுள்ள தமிழகத்துக்கும் இலங்கையின் வடக்குப் பகுதியான யாழ்ப்பாண தீபகற்பகத்துக்கும் இடையேயான பகுதிதான் பாக்கு நீரிணை. இந்தப் பகுதியில் கச்சத்தீவு உள்ளிட்ட பல சின்னஞ்சிறு ஆள் நடமாற்றம் இல்லாத தீவுகள் நிரம்பிக் கிடக்கின்றன. அவற்றிலுள்ள டெல்ப்ட், நயினாதீவு, அனலத்தீவு ஆகியவற்றில் காற்றாலைகளும் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையங்களும் அமைப்பதற்கான ஒப்பந்தத்தை இலங்கை அரசிடமிருந்து சீனா பெற்றிருக்கிறது. இந்தத் தீவுகள் 20 கடல் மைல் தூரத்தில், இந்திய கடல் எல்லையில் அமைந்திருக்கின்றன. விசைப்படகில் 30 நிமிடத்தில் அடைந்துவிடலாம்.

முன்னாள் இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் சொந்தமான, அதற்கு உட்பட்ட கச்சத்தீவின் மீதும் சீனா விழி பதித்திருக்கிறது. 1974இல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிமுறைகளை மீறி நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் அன்றைய இந்திரா காந்தி அரசு கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்தது.

அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த சர்தார் ஸ்வரண் சிங் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

தமிழகத்தில் அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.கவின் சார்பில் இரா. செழியன் நாடாளுமன்றத்தில் எதிர்ப்பை முன்வைத்தார் என்றாலும், அந்த முடிவுக்கு தமிழகத்தில் வலிமையான எதிர்ப்புக் குரல் எழவில்லை என்பதுதான் நிஜம். இந்து மகா சமுத்திரத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு கச்சத்தீவு மிகவும் முக்கியமானது என்பதை ஏறத்தாழ 48 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது நாம் உணரத் தொடங்கியிருக்கிறோம்.

கொழும்புத் துறைமுகத்தின் கப்பல் போக்குவரத்தில் 70%க்கும் அதிகமானவை இந்தியாவுக்கு வந்துபோகும் கப்பல்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. 2019 மே மாதம் இந்தியாவும் ஜப்பானும் இணைந்து கொழும்புத் துறைமுகத்தில் சரக்குப் பெட்டக முனையம் ஒன்றை உருவாக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. இப்போது அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு, இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் சீனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் கம்பனி என்கிற நிறுவனத்துடன் இணைந்து இலங்கையே சரக்குப் பெட்டக முனையத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் கடலை மண்ணால் நிரப்பி புதிய நகரம் ஒன்றை நிர்மாணிக்கும் திட்டத்தில் சீனா இறங்கியிருக்கிறது. 'கொழும்புத் துறைமுக நகரம்' என்கிற விவாதத்துக்குரிய அந்தத் திட்டத்திற்கு 225இல் 149 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கி அந்த ஒப்பந்தம் அங்கீகாரம் பெற்றிருக்கிறது. ஒருவகையில் பார்த்தால், கடலை மண்ணால் நிரப்பி உருவாகும் அந்தப் புதிய பகுதியை, இலங்கை சீனாவுக்கு விற்றுவிட்டதாகத்தான் கருத வேண்டும்.

இலங்கையின் தெற்கு மாகாணத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை உருவாக்கி நடத்த 99 ஆண்டு குத்தகைக்கு விட்டிருப்பது, மத்தல விமான நிலையத்தை நிறுவுவதில் இந்திய பங்களிப்பை நிராகரித்தது என்று கோட்டபாய அரசு எடுத்திருக்கும் முடிவுகள், சீனாவின் வழிகாட்டுதல்படி நடந்திருப்பதை உணர முடிகிறது.

தமிழர்கள் அதிகம் வாழும் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் தனது கால்களை வலுவாக பதிக்கும் முயற்சியிலும் சீனா இறங்கியிருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ளூர்வாசிகளின் கருத்துகளை கோராமல் சீனப் பொருளாதார நடவடிக்கைகளும், கட்டமைப்பு மேம்பாடுகளும் தொடர்கின்றன.

உலகிலேயே இயற்கை அரண்களுடன் அமைந்திருக்கும் திருகோணமலை துறைமுகமும் சீனாவின் பார்வையில் விழுந்திருக்கிறது.

முந்தைய மன்மோகன் சிங் அரசின் உதவியுடன் இலங்கையின் ராஜபக்ஷ அரசு ஈழத்தமிழர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்து, தமிழர்கள் அதிகம் வாழ்ந்த பகுதியில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தின் மூலம் இன அழிப்பை முன்னெடுத்திருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள பல கோயில்கள் இடிக்கப்படுகின்றன. இப்போது பாக்கு நீரிணையிலுள்ள தீவுகளில் சீனர்கள் நுழைந்திருக்கிறார்கள்.

இந்தியாவின் மிகப் பெரிய அணுமின் உற்பத்தி கேந்திரமான கூடங்குளம் தாக்கப்பட்டால் என்னவாகும்? நாம் யோசித்தாக வேண்டும்!

நன்றி - தினமணி

# தமிழ் மக்கள் மீதான பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இழைக்கப்பட்டுள்ள அவலத்துக்கு கூட்டமைப்பும் பொறுப்பு

## ஜனாதிபதியே மிகவும் மோசமான குற்றவாளியென கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



(யாழ். செய்தியாளர்)

தமிழ் மக்கள் மீதான பொறுப்புக்கூறலுக்கு எதிராக ஏற்பட்டு மிக மோசமான அவல நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளதாகவும் எமது நாட்டில் மிக மோசமான குற்றவாளியாக அடையாளப்படுத்தப் பட்டிருக்கும் நபர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இணையவழியிலாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்துகள் ஒன்றும் புதிதல்ல. அண்மையில் அவர் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் குடும்பங்களுக்கு ஒரு தெளிவான செய்தியை சொன்னார். அதாவது, காணாமலாக்கப்பட்டவர்கள் எப்படி காணாமலாக்கப்பட்டனர், என்ன நடந்தது, அதற்கு யார் குற்றவாளி, யார் பொறுப்பு என்ற விடயம் அனைத்தையும் தேடுவதைக் கைவிடும்படி ஜனாதிபதியே கூறியுள்ளார். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த நாட்டின் ஜனாதிபதி மிகப் பெரும் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் நபர். அவர் தானாகவே கூறியுள்ளார், பொறுப்புக்கூறல் விடயத்தை மறக்க வேண்டும் என்று. பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றி தொடர்ந்தும் அவர்களின் அவலங்களை தொடர வைக்கும் அளவுக்கு மோசமான செயல் இது.

கோட்டாபயவுக்கு முன் இருந்த அரசுகளும் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தை கைவிட்டு தமிழ் மக்களுக்கு எதிராக துரோகமே இழைத்தனர். காணாமலாக்கப்பட்ட அனைவரும் இறந்து விட்டனர் எனக் கூறி உண்மைகளைக் கண்டறியும் செயலிலிருந்து அனைவரும் விடுபடவேண்டும் என்றனர். தமிழ் மக்கள் மீதான பொறுப்புக்கூறலுக்கு எதிரான மிக மோசமான அவல நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளனர் - என்றார்.

# வட்டவளை வைத்தியசாலைக்கு பிள்ட்டர் இயந்திரம் கையளிப்பு



(கினிகத்தேனை நிருபர்)

வட்டவளை ஆதார வைத்தியசாலைக்கு பிள்ட்டர் இயந்திரம் (நீர் வடிகட்டி) இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் ஒழுங்கமைப்பாளர் அமில பிரசாத் கமகே மற்றும் டி.ஜி.பிரேமரத்ன ஆகியோரினால் நேற்று(16) வழங்கி வைக்கப் பட்டது.

வட்டவளை வைத்தியசாலையில் நோயாளர்களுக்கும் அங்கு கடமை புரியும் ஊழியர்களுக்கும் நீண்டநாள் குறைபாடாக காணப்பட்ட பிள்ட்டர் இயந்திரத் தேவையை பெற்றுக்கொடுத்துள்ளார். 35ஆயிரம் பெறுமதி வாய்ந்த குறித்த இயந்திரத்தை பெற்றுக்கொடுத்தமை குறித்து வைத்தியசாலையின் ஊழியர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். குறித்த நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர் உட்பட தாதியர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

# இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார - ஜனநாயக ஒத்துழைப்பு அவசியம்

### அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டில் மஹிந்த யாப்பா அபேவர்தன வலியுறுத்து



நவீன யுகத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் ஜனநாயக ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தின் லோக் சபாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இந்திய சபாநாயகர்கள் மாநாடு வீடியோ தொழில்நுட்பத்தினூடாக நேற்று முன்தினம் (15) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டின் நூற்றாண்டைக் குறிக்கும் வகையிலும், ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச ஜனநாயக தினத்தை முன்னிட்டு “பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ள ஜனநாயகத்துக்கு சட்டவாக்கத்தின் பங்கு” எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்திய லோக்சபாவின் சபாநாயகர் ஓம் பிர்லா தலைமை தாங்கிய இந்த மெய்நிகர் மாநாட்டில் அனைத்து நாடாளுமன்றங்களின் சங்கத்தின் தலைவர் டியுரெட் பச்செக்கோ மற்றும் ஒஸ்ரியா, கயானா, மாலைதீவு, ஸிம்பாவ்வே, மொங்கோலியா மற்றும் நபீபியா ஆகிய நாடுகளின் சபாநாயகர்களும் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியிருந்தனர். இந்திய பிராந்தியங்களின் சட்டமன்ற சபாநாயகர்கள் பலரும் வீடியோ தொழில்நுட்பத்தினூடாக இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர். நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவும் இம்மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நாடாளுமன்றம் ஆசியாவில் வயது வந்தவர்கள் வாக்களிப்பதற்கான உரிமையின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மிகவும் பழமையான நாடாளுமன்றமாகும். உலகின் ஜனநாயகத்தன்மையுடைய முக்கிய நாடு என்ற வகையில் இந்தியாவின் சட்டப்பேரவை பல்வேறு மத, பல்லின சமூகத்தில் எவ்வாறு செயற்படுகின்றது என்பது அயல்நாடான எமக்கு மாத்திரமன்றி ஜனநாயக ஆட்சியின் பங்குதாரர்களுக்கு மதிப்புமிக்க பாடங்களை வழங்குகிறது.

2015ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கை விஜயத்தின்போது இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்தியது.

பொதுமக்களின் பங்களிப்பு மற்றும் நாடாளுமன்ற செயற்பாடுகளில் பொது மக்களின் ஈடுபாடுகளை அதிகரிக்கும் நோக்கில் திறந்த நாடாளுமன்றம் என்ற கொள்கையை இலங்கை நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட தொடர்பாடல் திணைக்களத்தினூடாக பொதுமக்களைச் சென்றடைவதற்கு நாடாளுமன்றம் அண்மையில் நடவடிக்கை எடுத்துள்ளது. நாடாளுமன்ற செயற்பாடுகள் பற்றிய அறிவை வளர்ப்பதற்கும், ஜனநாயகத்தை மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கும் குறிப்பாக ஜனநாயகத்தின் கொடியை ஏந்தக்கூடிய எதிர்கால சந்ததியினரான பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு இவற்றை விஸ்தரிக்க எதிர்பார்த்துள்ளோம்.

தகவல் அறியும் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் குழுக்களின் செயற்பாடுகளை அறிக்கையிட ஊடகங்களுக்கு அனுமதி வழங்க இலங்கை நாடாளுமன்றம் தீர்மானித்ததுடன், அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்கு வழிவகுக்கக் கூடிய வகையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தை பலப்படுத்தும் முறையை நோக்கிய நடவடிக்கையாக இது அமைந்துள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் கீழ்வரும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் அமைச்சர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கக் கூடிய துடிப்பான குழு முறைமையை இலங்கை நாடாளுமன்றம் கொண்டுள்ளது.

கொரோனா சவால்களுக்கு மத்தியில் சுகாதாரப் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கவனத்தில் கொண்டு நாடாளுமன்ற அமர்வு நாட்கள் குறைக்கப்பட்டாலும் வழமையான நாடாளுமன்ற அமர்வுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

# அநுராதபுரத்தில் 53 நெல் களஞ்சியங்களுக்கு பூட்டு



(அநுராதபுரம் நிருபர்)

நுகர்வோர் அதிகார சபையில் பதிவு செய்யாத அரிசி ஆலைகள் மற்றும் நெல் களஞ்சியசாலைகள் மீதான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 53இற்கும் அதிகமான நெல் களஞ்சியசாலைகளுக்கு இதுவரையில் சீல் வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் அநுராதபுரம் அலுவலக பொறுப்பதிகாரி பீ.ஏ.சீ.பி.பெரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கடந்த மாதத்தின் இறுதியிலிருந்து பரவலாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே இந்த 53 இற்கும் அதிகமான நெல் களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது 25 இலட்சம் கிலோவுக்கும் அதிகமான நெல்தொகை நுகர்வோர் அதிகார சபையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதிகார சபையினரது கட்டுப்பாட்டிலுள்ள பெருந்தொகையான நெல் மூடைகள் நேற்று முன்தினம் அநுராதபுரம் பரசன்கஸ்வெவ மற்றும் பண்டுகாபயபுர ஹத்தே எல பகுதிகளிலுள்ள களஞ்சியசாலைகளில் கைப்பற்றப்பட்ட இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான நெல் தொகை, நெல் சந்தைப்படுத்தும் சபையின் அநுராதபுரம் ரம்பாவ களஞ்சியசாலைகளுக்கு நிர்ணய விலைக்கு விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளது கண்காணிப்பின் கீழ் இடம்பெறுவதாக அநுராதபுரம் அலுவலக பொறுப்பதிகாரி பெரேரா மேலும் தெரிவித்தார்.

# சம்பள முரண்பாடு தொடர்பில் தலவாக்கலையில் தெளிவூட்டல்





(தலவாக்கலை நிருபர்)

அதிபர், ஆசிரியர்களது சம்பள முரண்பாடு மற்றும் இலவச கல்விக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற சதிகளை முறியடிக்கும் முகமாக ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களால் கடந்த இரு மாதங்களாக மேற்கொண்டு வரும் போராட்டம் தொடர்பாக ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சார்பாக தலவாக்கலை மதத் தலைவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது நகர பௌத்த விகாரையின் விகாராதிபதி, பள்ளிவாசல் மௌலவி, தேவாலய அருட்தந்தை, ஆலய பிரதமகுரு, ஆலய பரிபாலன சபைத் தலைவர், மக்கள் வங்கியின் முகாமையாளர், இலங்கை வங்கியின் முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் மற்றும் தலவாக்கலை நகர வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆகியோரை சந்தித்து அதிபர், ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.



***பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 21 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த துஆப் பிரார்த்தனை நிகழ்வு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் நேற்று (16) இடம்பெற்றது.***

# நெல்லியடி இராஜ கிராமத்தில் குழுமோதல்

### 15 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், நெல்லியடி - இராஜ கிராமத்தில் இரு கும்பல்களுக்கிடையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் 15 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பின்னர் அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 15 சந்தேகநபர்களுக்கும் எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவ இடத்துக்கு சென்றிருந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் விசாரணைகளின் அடிப்படையில் மோதலுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் இவர்கள் 15 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட 15 பேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா அபாயம் காரணமாகவே இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டபோதும், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# பாரதி நூற்றாண்டு நிகழ்ச்சி இன்று

மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டை முன்னிட்டு இலங்கை நிகர் சமூக கலை, இலக்கிய அரங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சி இன்று (17) மாலை 6.00 மணிக்கு மெய்நிகர் முறையில் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த எழுத்தாளர் லெ.முருகபூபதி இந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்துவார். தமிழ் வாழ்த்துடன் தொடங்கும் இந்நிகழ்வு, வீ.எம்.ரமேஷின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும்.

ம. சதுர்சிக்கா, ச.அக்சயா ஆகியோரால் கவிதைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. ‘பாரதியின் கண்ணன் பாடல்’ – ஒரு மீள்பார்வை என்ற தலைப்பில் வ.செல்வராஜ் சிறப்புரையாற்றுவார். உச்சிமலை உதயா, த. மகேந்திரன் ஆகியோரின் கவிதைகளைத் தொடர்ந்து கருத்துரைகளும் வே.இராமரின் நிறைவுரையும் நிகழும். நிகழ்ச்சித் தொகுப்பு அ.வைத்தியலிங்கத்தால் முன்னெடுக்கப்படும் என்பதுடன் நிகர் சமூக கலை இலக்கிய அரங்கத்தின் சார்பில் அ.லெட்சுமணனால் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்யப்பட்டுள்ளது.

https://chords-org-lk.zoom.us/j/5450681728?pwd=OGtZUmFNNlY5Wm9FUGZlYUxBWFh6Zz09 என்ற சூம் முகவரியினூடாக இந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடியுமென்றும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. Meeting ID: 545 068 1728

Passcode: aruna

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவு கட்டிடம் அபிவிருத்தி

## 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு



(பொத்துவில் நிருபர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவிற்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் மேல்தளம் 16 மில்லியன் ரூபா நிதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இக்கட்டிடத்தின் மேல்தள அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (15) வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது, பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித், திட்டமிடல் வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், கட்டிடத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் கே.அச்சுதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவிற்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் முதலாம் கட்டப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அதன் மேல்தள அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன.

குறித்த கட்டடத்தின் தற்போதைய நிலைமைகளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு சென்ற, பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஐ.எல்.எம்.றிபாஸ் அக்கட்டிடத்தினை பூர்த்திசெய்து தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த விடயம் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதையடுத்து, மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் இக்கட்டிட அபிவிருத்திக்கென 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட, வைத்திய அத்தியட்சகர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன் மற்றும் திட்டமிடல் வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோருக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கொரோனா நோயாளரால் மருத்துவப் பொருட்கள் அன்பளிப்பு!



(கல்முனை நிருபர்)


கல்முனை ஆதார வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சைப் பிரிவில் கொவிட் தொற்றுடன், அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றவர் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவப் பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் முன்னாள் பொருளாளரான மகாலிங்கம் என்பவரது புதல்வரான பொறியியலாளர் ம.திவாஷ்கர் மேற்படி அன்பளிப்பை வைத்திய அத்தியட்சகர் இரா.முரளீஸ்வரனிடம் வழங்கிவைத்தார்.

தான் கொவிட் தொற்று காரணமாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது ஊழியர்கள் மருத்துவர்களின் அர்ப்பணிப்பான சேவையை எண்ணி மனம் நெகிழ்வதாகவும் இவ்வாறான சேவைகளை பாராட்டும் வகையில் இச்சிகிச்சை நிலையத்துக்கு தேவையான மருத்துவப் பொருட்களை அன்பளிப்பு செய்ய முடிவெடுத்ததாகவும் இவ்வாறே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சைப் பிரிவுக்கும் அன்பளிப்பை செய்யவுள்ளதாகவும் கூறினார்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# அம்பாறையில் மயில் கூட்டங்களின் வருகை; குறைந்துள்ள விஷ ஜந்துகளின் நடமாட்டம்



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் மயில்களின் வருகையினால் வெற்றுக்காணிகள், வயல்வெளிகளில் உள்ள விஷ ஜந்துகளின் நடமாட்டம் குறைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மை செய்கை அறுவடை நிறைவடைந்துள்ள நிலையில், பெரும்போகச் செய்கை ஆரம்பமாக உள்ள நிலையில், காலை முதல் மாலை வரை மயில்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மக்களினால் கைவிடப்பட்டுள்ள வெற்றுக்காணிகள், வயல் வெளிகளில் உள்ள விஷ ஜந்துகளான பாம்புகள், பூராண்கள், தேள்கள், நண்டுகள் மற்றும் விஷப்பூச்சிகளின் தொல்லை மயில்கூட்டங்களின் வருகையினால் குறைவடைந்துள்ளதுடன், விஷ ஜந்துகளின் நடமாட்டங்களும் மயில்களின் விகாரமான சத்தங்களினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.





குறிப்பாக விதைப்பு காலங்களில் விஷ ஜந்துகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்ட போதிலும் இப்பகுதிக்கு எண்ணிக்கையற்ற மயில் கூட்டங்கள் வருகை தந்து விஷ ஜந்துகளை கட்டுப்படுத்தி வேட்டையாடி வருவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

மயில் கூட்டங்களின் வருகையினால் அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை, ஒலுவில், அட்டாளைச்சேனை, மத்தியமுகாம், நாவிதன்வெளி, சவளக்கடை, சம்மாந்துறை பகுதிகளில் விஷ ஜந்துகள் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த வேலைவாய்ப்பற்ற சுதேச வைத்தியர்களுக்கு நியமனம் வழங்க கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

கொரோனாவை சுதேச வைத்தியத்தின் மூலம் கட்டுப்படுத்த ஆயிரம் வைத்தியர்கள் தயாராக உள்ளதாக வேலைவாய்ப்பற்ற சித்தவைத்திய சங்கத் தலைவர் வைத்தியர் ஹபில் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய துறைகளில் பட்டம்பெற்று உள்ளக பயிற்சிகளை நிறைவுசெய்த ஆயிரம் வைத்தியர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டிலிருந்து அரச நியமனம் கிடைக்காமல் வேலைவாய்ப்பற்ற நிலையில் வீட்டில் இருக்கும் துர்ப்பாக்கிய நிலை நம் நாட்டில் மட்டும் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

தற்போதைய கொரோனா இடர் காலத்தை கருத்தில்கொண்டு சுகாதாரத் துறையை வலுப்படுத்த வேலையற்ற சுதேச


Unemployed Siddha Doctors Association

வைத்தியர்களுக்கு அரச நியமனம் வழங்கி, கொரோனா சிகிச்சை நிலையங்களில் சேவையாற்ற வழிசெய்வதே அரசின் புத்திசாலித்தனமானதும் ஆரோக்கியமானதுமான முடிவாகும் என நினைக்கிறேன்.

மேலும் இதுதொடர்பாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடியுடன் பலமுறை பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை. மற்றும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மாறாக அலோபதி துறையில் உள்ளக பயிற்சியை தொடங்காத மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருப்பது மிக்க வேதனை அளிக்கிறது.

நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இலவச கல்வியை கற்று சுகாதாரத் துறையில் தேர்ச்சிபெற்ற வைத்தியர்களாகிய எமக்கு உடனடியாக அரச நியமனம் வழங்கி, நாட்டு மக்களுக்கு புத்துணர்ச்சியுடன் சேவையாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கந்தளாயில் எட்டு வயது சிறுமி துஷ்பிரயோகத்திற்குட்படுத்த முயற்சி

## சந்தேக நபர் விளக்கமறியலில்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எட்டு வயதுடைய சிறுமியொருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்த முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது நேற்று முன்தினம் (15) உத்தரவிட்டார்.

பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சிறுமியின் வீட்டில் மலசலகுழி வேலைகளில் ஈடுபட்டு வந்த நிலையில், சிறுமியின் தாயார் வெளியில் சென்றவேளை, சிறுமியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்த முயன்றதாக கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தாயாரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சந்தேகநபரை கைதுசெய்து கந்தளாய் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கல்முனையில் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 21ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு!

(எம்.என்.எம்.அப்ராஸ்)




ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மாமனிதர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 21ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கத்தமுல் குர்ஆனும் துஆப் பிரார்த்தனையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸின் ஏற்பாட்டில் அவரது கல்முனை அலுவலகத்தில் நேற்று (16) அனுஷ்டிக்கப்பட்டது.

கொரோனா காரணமாக சுகாதார நடைமுறைகளை பேணி குறித்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம்.ரோஸன் அக்தார், ஏ.சி.ஏ.சத்தார், எம்.எஸ்.நிசார்(ஜேபி), ஏ.எம்.பைறோஸ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களான தேசமான்ய அல்ஹாஜ் ஏ.பி.ஜௌபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரிஸின் இணைப்புச் செயலாளர் நௌபர் ஏ.பாவா, மௌலவி.டி.நௌபர் அமீன் (வாஹிதி), மௌலவி அல்ஹாஜ் எம்.எம்.ஜமாலுடின் (ஹாஸிமி) கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மறைந்த பெருந் தலைவர் அஷ்ரப்பின் வாழ்க்கை வரலாறு பற்றி கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ரோஸன் அக்தார், எம்.எஸ் நிஸார்(ஜே.பி), ஏ.சி.ஏ.சத்தார் ஆகியோரால் நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டதுடன், மறைந்த தலைவர் அஷ்ரப்பின் மறுமைவாழ்வின் ஈடேற்றத்திற்காக விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

# ஊரடங்கு நேரத்தில் சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

## பெக்கோ இயந்திரம் மீட்பு



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்வில் ஈடுபட்ட இருவரை கைதுசெய்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்தார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னக்குடா பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை (15) மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள், பொறுப்பதிகாரி பண்டார தலைமையில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமான முறையில் மணல் அகன்று கொண்டிருந்த நிலையில் இருவரைக் கைதுசெய்ததுடன், அகழ்விற்குப் பயன்படுத்திய பெக்கோ இயந்திரமும் மீட்கப்பட்டது.

கைதான நபர்களையும் மற்றும் பெக்கோ இயந்திரத்தையும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அட்டாளைச்சேனையில் மினி சூறாவளி; மீனவ வாடிகள்–குடியிருப்புகளுக்கு சேதம்

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை கோணாவத்தை பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக அப்பகுதியின் கரையோரப் பிரதேசங்களில் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள கோணாவத்தை பகுதிகளில் நேற்று முன்தினம் (15) மாலை வீசிய பலத்த சுழல் காற்று மினி சூறாவளியாக மாறி பல்வேறு சேதங்களை ஏற்படுத்தியது. கோணாவத்தை பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மீனவ வாடிகள் சில இந்த மினி சூறாவளி காரணமாக பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன. சில மீனவ குடிசைகளின் கூரைகள் காற்றின் காரணமாக உடைந்து சேதமாகியுள்ளன. மீனவக் குடிசைகளில் இருந்த பெறுமதிமிக்க கடற்றொழில் உபகரணங்களும் இதனால் சேதமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கோணாவத்தை பிரதேசத்தில்





உள்ள சில மக்கள் குடியிருப்புகளுக்கும் இம்மினி சூறாவளி காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. குடியிருப்பு மனைகளின் கூரைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

கடற்கரைப் பகுதியில் பலத்த காற்று வீசி வருவதனால் கரையோரப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் மற்றும் வள்ளங்கள் சிலவற்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக அம்பாறை மாவட்டத்தில் காலநிலை சீரின்மையால் மீனவத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பலத்த காற்றின் காரணமாக கடலலைகள் சுமார் பத்து அடிக்கு மேலெழுவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

# உலக செய்திகள்

## இரவை பகலாக்கிய ஐஸ்லாந்து எரிமலை!!

ஐஸ்லாந்தில் இரவையே பகலாக மாற்றும் வகையில் எரிமலையிலிருந்து தீக்குழம்பு வெளியேறும் வீடியோ இணையதளத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

Geldingadalir பகுதியில் உள்ள எரிமலை கடந்த மார்ச் மாதம் முதல் வெடித்து தீக்குழம்பை கக்கி வருகிறது. சுற்றுலாப் பயணி ஒருவர் வெளியிட்ட எரிமலையின் இரவு நேர காட்சி இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.





## செல்வாக்குமிக்கோரின் பட்டியலில் இளவரசர் ஹரி - மேகன் தம்பதிகள்






உலகில் செல்வாக்குள்ள நூறு பேரில் பிரித்தானிய இளவரசர் ஹரியும் அவரது மனைவி மேகனும் தெரிவாகியுள்ளனர்.

அமெரிக்காவின் டைம்ஸ் சஞ்சிகை நடத்திய ஆய்வில் 2021ஆம் ஆண்டின் செல்வாக்குமிக்க நபர்களின் பட்டியலில் இவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஹரியும் - மேகனும் பல்வேறு பொதுநல சேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஏராளமான சுகாதாரத் திட்டங்கள் மற்றும் கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், டைம்ஸ் சஞ்சிகையின் செல்வாக்குமிக்க நபர்களின் பட்டியலில் தெரிவாகியுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாகவும் அது மேலும் சமூக சேவைக்கான உந்துதலை அளிப்பதாகவும் ஹரி தம்பதியர் தெரிவித்துள்ளனர்.

அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் மிக எளிமையான வாழ்க்கை நடத்திவரும் அவர்களை உலக மக்கள் பாராட்டிவருவதாக டைம்ஸ் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அவர்கள் தெரிவுசெய்யப்பட்டமையை அறிவிக்கும் முகமாகவும் கௌரவப்படுத்தும் விதமாகவும் டைம்ஸ் சஞ்சிகை அதன் அட்டைப் படத்தில் ஹரி - மேகனின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் டைம்ஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ள மிகுந்த செல்வாக்குள்ள 100 பேர் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், தலிபான்கள் அமைப்பின் இணை நிறுவனர் முல்லா அப்துல் கனி பராதர், டென்னிஸ் வீராங்கனை நவோமி ஒஸாகா, ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நாவல்னி, பிரபல பொப் இசைப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் உள்ளிட்டோரும் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பெனர்ஜி, சீரம்-இந்தியா நிறுவனத் தலைவர் அதார் பூனாவாலா ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

## கொரிய தீபகற்பத்தில் மீண்டும் ஆயுதப் போட்டி - பதற்றம்

### வட - தென் கொரிய நாடுகள் அடுத்தடுத்து ஏவுகணை பரிசோதனை



வடகொரியா, தண்டவாளத்தில் நிறுத்திவைக்கப்பட்ட ரயிலின் கூரையிலிருந்து ஏவுகணை ஏவி வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது. அந்த ஏவுகணை சுமார் 800 கிலோ மீற்றர் தொலைவுக்கு பாய்ந்து வட கொரியாவின் கிழக்கு கடற் பகுதியிலிருந்த இலக்கை தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவும் தென்கொரியாவும் போட்டிப் போட்டு ஏவுகணை பரிசோதித்து வருவதால் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக அமைதியாக இருந்து வந்த வடகொரியா, தற்போது அடுத்தடுத்து ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வருகிறது. கொரோனா அச்சுறுத்தி கொண்டிருந்த நிலையில், ஓராண்டாக அமைதியாக இருந்துவந்த நிலையில் கடந்த மார்ச் மாதத்தில் 2 ஏவுகணைகளை பரிசோதித்தது.

மேலும், கடந்த ஞாயிறன்று 1,500 தூரத்திலுள்ள இலக்கை தாக்கி அழிக்கவல்ல ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது. இதற்கு, அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மேலும் கண்டம் விட்டு கண்டம் பாயும் இரண்டு ஏவுகணைகளை செலுத்தி அதில் வெற்றி கண்டது. மத்திய வடகொரியாவிலிருந்து கொரிய தீபகற்பத்தின் கிழக்கு கடல் பகுதியை நோக்கி இவை செலுத்தப்பட்டன.

ஜப்பானின் பொருளாதார கடல் மண்டலத்துக்கு வெளியே இந்த ஏவுகணைகள் தாக்கியதாக ஜப்பான் கடலோர கடல் படை உறுதி செய்துள்ளது. இதற்கும் அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா தெரிவிக்கையில், வடகொரியாவின் நடவடிக்கை மூர்க்கத்தனமானது. பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், தென்கொரியாவும் நேற்றுமுன்தினம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வீசி சோதனை செய்தது.

கடந்த மாதம் தென்கொரிய கடற்படையில் சேர்க்கப்பட்ட 3 ஆயிரம் தொன் எடை கொண்ட 'தோசன் அன் சாங்-ஹோ' என்ற நீர்மூழ்கி கப்பலிலிருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டது. வடகொரியாவும், தென்கொரியாவும் பரம எதிரிகளாக உள்ள நாடுகள். கடந்தாண்டு இவற்றுக்கு இடையே ஒற்றுமை ஏற்பட்டது. பின்னர், மீண்டும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற நிலையில், இருநாடுகளும் ஒரேநாளில் அடுத்தடுத்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்திருப்பது, கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தென்கொரியா அணு ஆயுத பலமில்லாத நாடு. இப்படிப்பட்ட ஒரு நாடு, முதன்முறையாக நீர்மூழ்கி கப்பலிலிருந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவி பரிசோதித்திருக்கிறது. இந்த பரீட்சார்த்த ஏவுகணை பரிசோதனையை தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே- இன் பார்வையிட்டார்.

'இது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. வடகொரியாவுக்கு பதிலடி அல்ல' எனவும் தென்கொரியா தெரிவித்தது. இந்த பரிசோதனை மூலம் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவுகணையை செலுத்தும் தொழில்நுட்பத்தைப் பெற்றுள்ள நாடுகளின் வரிசையில் 7ஆவது நாடாக தென்கொரியா சேர்ந்துள்ளது.

இந்த ஏவுகணை சோதனையைப் பார்வையிட்ட அந்நாட்டு ஜனாதிபதி மூன் ஜே-இன், வடகொரியாவின் சீண்டல்களுக்கு எந்த நேரத்திலும் பதிலளிக்கும் திறனைப் பெற்றுள்ளோம் என்றார்.

நீர்மூழ்கி கப்பலிலிருந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தும் பலத்தை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், வடகொரியா, இந்தியா ஆகியவை மட்டுமே பெற்றுள்ளன. தற்போது, இந்த பட்டியலில் தென்கொரியாவும் சேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வட - தென் கொரிய நாடுகளின் ஏவுகணை சோதனைகளால் கொரிய தீபகற்பத்தில் ஆயுதப் போட்டியும் பதற்றமும் மீண்டும் அதிகரித்துள்ளது.

வடகொரியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டுமானால், அணு ஆயுத மற்றும் ஏவுகணை சோதனைகளைக் கைவிட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.
இதுதொடர்பாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் உடன்பாடு ஏற்படாததையடுத்து அப்பேச்சுவார்த்தை 2019இல் தடைபட்டது. அதிலிருந்தே வடகொரியா அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட ஆயுதங்களைத் தயாரிக்கப் போவதாக அச்சுறுத்தி வருகிறது. அவ்வப்போது ஏவுகணை பரிசோதனையிலும் ஈடுபட்டு வருகிறது.



பேரறிஞர் அண்ணாவின் 113ஆவது பிறந்தநாளையொட்டி சென்னை அண்ணா சாலையிலுள்ள, அண்ணா சிலைக்கு தி.மு.க. தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின்னர், அங்கிருந்து வள்ளுவர் கோட்டம் சென்று, அங்குள்ள அண்ணா சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தியபோது...



வெள்ளத்தில் மிதக்கும் குஜராத் - ஒடிசா....

**சீன ஆதிக்கத்தை கட்டுப்படுத்த...**

## பாதுகாப்பு கூட்டணியமைக்கும் அமெரிக்கா - பிரிட்டன் - ஆஸி.


இந்தோ - பசுபிக் கடல் பகுதியில் சீனாவின் அதிகாரத்தைக் கட்டுக்குள் கொண்டு வர அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகள் பாதுகாப்பு கூட்டணி அமைத்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர்களுடன் ஜோ பைடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில்,

'AUKUS' என்ற இந்தப் புதிய கூட்டணி இந்தோ -பசுபிக்கை பாதுகாப்பான பிரதேசமாக மாற்றும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு அணு-ஆயுதம் தாங்கி நீர்மூழ்கிக் கப்பல் படையை உருவாக்குவது இக்கூட்டணியின் முதல் செயற்றிட்டமாகவுள்ளது.

## அரசியல் களமான மெட் காலா



அமெரிக்காவில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் 'மெட் காலா ஃபேஷன் ஷோ நிகழ்ச்சியில் நடப்பாண்டு பல்வேறு அரசியல் அர்த்தம் வாய்ந்த நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் மெட் காலா ஃபேஷன் நிகழ்ச்சி உலகப்புகழ் பெற்றது. இந்நிகழ்வில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நடிகைகள், நடிகர்கள், மொடல்கள் என பிரபலம் வாய்ந்த பலரும் கலந்து கொள்வது வழக்கம்.

இந்நிலையில் நடப்பாண்டில் நடைபெற்றுவரும் மெட்காலா பேஷன் ஷோ நிகழ்ச்சியில் பல்வேறு அரசியல் அர்த்தம் பொருந்திய உடைகளை உடுத்தி வந்த மொடல்களால் நிகழ்ச்சியில் பரபரப்பு கூடியுள்ளது.



நியூயோர்க்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரபல தனியார் நிகழ்ச்சி பிரபலமான கிம் கர்தாஷியனின் உடை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. கறுப்பின மக்கள் மீதான வன்முறையை எதிர்த்தும், கறுப்பின மக்களுக்கு ஆதரவளிக்கும் விதமாகவும் கிம் கர்தாஷியன் தலை முதல் முழு உடலையும் மறைக்கும் விதமாக கறுப்பு நிற உடை அணிந்து கலந்துகொண்டார்.

அதேபோல் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினரான அலெக்சாண்ட்ரியா ஒகாசியோ கார்டஸ் அணிந்து வந்த ஆடையும் பேசுபொருளாகியுள்ளது.

அவர் அணிந்து வந்த வெள்ளை நிற ஆடையின் பின்புறம் பொறிக்கப்பட்டிருந்த 'செல்வந்தர்களுக்கு வரி விதிப்பீர்' என்கிற வாசகம் தற்போது விவாதத்தைக் கிளப்பியுள்ளது. உலகின் முக்கிய கவனம் பெற்ற பேஷன் நிகழ்ச்சி தற்போது அரசியல் பரபரப்பைக் கிளப்பும் இடமாக மாறியுள்ளது அனைவரையும் ஈர்த்துள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தலில் தனித்து களமிறங்கும் ம.நீ.ம.

உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள 9 மாவட்டங்களிலும் பரப்புரைப் பயணம் மேற்கொள்ளவிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். ''களத்தில் சந்திப்போம், வெற்றி நமதே' எனவும் குறிப்பிட்டுள்ளார்.



# இலங்கையின் T20 உலகக்கிண்ண 'சுப்பர் 12' வாய்ப்பு கேள்விக்குறி

# பல கேள்விகளை எழுப்பிய தென்னாபிரிக்க T20 தொடர்




## T20 அணிக்கு தனஞ்ஜய டி சில்வா தேவையா?

அபியூத்

இலங்கை அணியின் ஒட்டுமொத்த சொதப்பலை மட்டுமே காண்பித்து, அவமானங்களை அள்ளிப் பருக வைத்திருக்கிறது தென்னாபிரிக்க அணியுடனான இருபதுக்கு 20 சர்வதேச தொடர். முதல் தடவையாக தென்னாபிரிக்க அணி இலங்கையர்களின் சொந்த மைதானத்தில் வைத்து இருபதுக்கு 20 தொடரில் இலங்கை அணியை வெள்ளையடிப்பு

தற்போதைய இலங்கை அணியை பொறுத்தவரை, எட்டாவது இடத்தில் களமிறங்கும் சமிக்க கருணாரட்ண வரையில் மிகப்பெரிய துடுப்பாட்ட பலம் கொண்ட ஒரு அணி. அந்த துடுப்பாட்ட வரிசையில் அனுபவம் கிடையாது என்பதனால் தான் இத்தனை தளம்பல்கள் நிகழ்கின்றன.

பங்களாதேஷ், மேற்கிந்திய தீவுகள், இங்கிலாந்து போன்ற அணிகளுடன் மத்திய வரிசை துடுப்பாட்டத்தில் பிரகாசித்த வனிந்து ஹஸரங்க காணப்படுகிறார். அணித்தலைவர் சானக்க கூட மிகப்பெரிய ஹிட்டிங் அபிலிட்டி கொண்டுள்ள ஒரு வீரர். அவ்வாறு நம்பப் பெற்ற துடுப்பாட்ட வரிசையிடமிருந்து, இந்த தொடர் முழுவதுமே கிடைக்கப்பெற்றது வெறும் 52 ஓட்டங்கள்

பவர் பிளே ஓவர்களில் ஓட்டங்களுக்கு பஞ்சமிருந்திருக்கவில்லை. ஆனாலும் சிறந்த ஒரு இருபதுக்கு 20 போட்டியின் ஓட்ட எண்ணிக்கையை எட்ட முடியாமல் 100, 120 என்ற அடிமட்ட ஓட்டங்களையே பெற்றனர்.

அதாவது ஒரு டெஸ்ட் போட்டியாக இருக்கலாம், ஒருநாள் போட்டியாக இருக்கலாம், ஏன் ஒரு இருபதுக்கு 20 போட்டியாக இருந்தாலும் கூட ஒரு பக்கத்தில் துடுப்பாட்ட வீரர் ஒருவர் விக்கெட் விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மறு பக்கத்தில் துடுப்பெடுத்தாடுபவர் ஓட்டத்தை அதிகரிக்கும் வேலையை சிறப்பாக செய்ய வேண்டுமானால், மறு பக்கத்தில் கட்டாயமாக ஒருவர் தடுத்தாடியே ஆக வேண்டும். அதனை இங்கு யாரும் செய்திருக்கவில்லை.




செய்திருக்கிறது.

தசுன் சானக்க தலைமையிலான அணி முதல் தடவையாக ஒரு இருபதுக்கு 20 தொடரில் தோல்வி கண்டிருக்கிறது. இதே இளம் வீரர்களை வைத்துத் தான் பலம் பொருந்திய பாகிஸ்தான் படையை அவர்களுடைய சொந்த மைதானத்தில் வைத்து 3-0 என துவம்சம் செய்திருந்தார் தசுன் சானக்க. இதே வீரர்கள் தான் தவான் தலைமையிலான இந்திய அணியுடனும், பலப்பரீட்சை நடத்தி இருபதுக்கு 20 தொடரை வெற்றி கண்டிருந்தார்கள்.

ஏன், கடந்த ஒருநாள் தொடரைக் கூட தென்னாபிரிக்காவுடன் கைப்பற்றிக் கொண்ட விதம், மீண்டும் இலங்கை அணி மீண்டுவிட்டதாய் எண்ண வைத்திருந்தது. அத்தனை எண்ணங்களையும் தவிடு பொடியாக்கிப் போட்டு விட்டது இந்த இருபதுக்கு 20 தொடரின் பெறுபேறுகள்.

தான்.

அதற்கும் மேலாக துடுப்பாட்ட அரணாக அணியை மீட்டு வந்த தனஞ்ஜய டி சில்வா இந்தத் தொடரில் 1,4,1 என்று மொத்தமாக 6 ஓட்டங்களை மட்டுமே பெற்று அணியை மீட்டுக் கொடுக்கத் தவறியிருந்தார். இதுவரையில் எந்தத் தடுமாற்றமுமின்றி அணியுடன் பயணித்த தனஞ்ஜய டி சில்வா இருபதுக்கு 20 அணிக்குள் தேவையா என்றெல்லாம் ரசிகர்களை புலம்ப வைத்து விட்டார்.

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தைப் பொறுத்தவரை இருபதுக்கு 20 போட்டிகளில் 150 ஓட்டங்கள் என்பதே மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கை தான். முதல் பவர் பிளே ஓவர்களில் தேவையான ஓட்டங்களை குவித்து விட வேண்டும். இந்த மூன்று போட்டிகளிலுமே தென்னாபிரிக்க அணியினர் அதைத் தான் செய்திருந்தார்கள்.

ஆனால் இலங்கை அணி முதலாவது போட்டியில் அந்த விடயத்தை பொருட்படுத்தாமல் ஒருநாள் போட்டியைப் போல நிதானமான, மெதுவான இன்னிங்ஸ் ஆடி, படு தோல்வியடைந்தது. அடுத்த போட்டிகளில் குசல் பெரேரா அணிக்குள் திரும்பியதால்

முதலாவது இருபதுக்கு 20 ஆட்டத்தில் தினேஷ் சந்திமால் தடுத்தாடி விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் எதிர் முனையில் யாரும் அடித்து ஆட முடியாமல் திணறி விக்கெட்டைகளை பறிகொடுத்தனர்.




அதற்கு எதிர்மாறாக, இறுதி இரண்டு போட்டிகளிலுமே குசல் பெரேரா இருபதுக்கு 20 இன்னிங்ஸ்களை ஆரம்பித்திருந்தார். ஆனால் தொடர்ச்சியாக அந்த இன்னிங்ஸை ஆட முடியாமல் எதிர்முனை விக்கெட்கள் சரியத் தொடங்க, தேவையற்ற ஷொட்களை ஆடி 30, 39 என்ற ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார். குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள அதிகளவில் சிரமப்படுகிறார்கள். ஸ்வீப் ஷொட்களை

ஆடுவதில் தவறுகிறார்.

இலங்கை அணி இன்னும் சில நாட்களில் இருபதுக்கு 20 உலகக்கிண்ண தகுதிச்சுற்றில் ஆட வேண்டும். அதில் வெற்றி பெற்றால் மட்டுமே இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் ஆட முடியும். நெதர்லாந்து, நமீபியா போன்ற அணிகளோடு போட்டி போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனை விட ஓமான் அணியுடன் இருதரப்பு இருபதுக்கு 20 தொடர் ஆடப் போகிறார்கள்.

ஐ.பி.எல். போட்டிகளில் ஆடவிருப்பதனால் வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சமீர போன்ற வீரர்கள் இந்தத் தொடரில் ஆடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த இரு வீரர்களும் இல்லாமல் என்ன செய்யப் போகிறது இலங்கை அணி. இந்தளவுக்கெல்லாம் யோசிக்குமளவிற்கு பாரிய வீழ்ச்சிப் பாதையில் பயணிக்கின்றது இலங்கை அணி.

துடுப்பாட்ட வரிசையைப் பொறுத்தவரை 100% முயற்சியே போதாது. அதிலும் இரண்டு மடங்கு போராட வேண்டும். ஒட்டுமொத்த துடுப்பாட்டத்திலும் முழு மாற்றமும் தேவை. நடைபெறவுள்ள ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தகுதி சுற்றில் முன்னேறி, அடுத்த சுற்றான 'சுப்பர் 12' சுற்றுக்கு தகுதி பெறுமா என்பதும் கேள்விக்குறியாகியிருக்கிறது.

பொறுத்திருந்து பார்ப்போம் நடக்குமா என்று, இந்தத் தொடரில் செய்த பிழைகளைத் திருத்திக் கொண்டு மீண்டு வருமா இந்த இளம்படை?

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# அசைக்க முடியாத ஐ.பி.எல் சாதனைகள்

கிரிக்கெட் போட்டிகளில் சாதனைகள் நிலைநாட்டப்படுவதும், அவை முறியடிக்கப்படுவதும் வழமையான சம்பவங்கள். ஐ.பி.எல் வரலாற்றில் பதியப்பட்ட மிக முக்கியமான மூன்று சாதனைகளை முறியடிக்க முடியுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## கோஹ்லியின் 973 ஓட்டங்கள்

விராட் கோஹ்லி தலைமையிலான ஆர்.சி.பி அணி ஐ.பி.எல் கிண்ணத்தை ஒருமுறை கூட வெல்லவில்லை. என்றாலும், 2016 ஐ.பி.எல் தொடரில் கோஹ்லி அடித்த 973 ஓட்டங்களை இன்று வரையில் எவராலும் எட்டமுடியவில்லை. அந்தத் தொடரில் அவர் நான்கு சதங்கள் அடித்தார்.



## கிறிஸ் கெய்ல் புயல்

2013ஆம் ஆண்டு சர்ச்சைகள், சூதாட்ட மோசடிகள், புகார்கள் எழுந்த ஐ.பி.எல் தொடரில் புனே வாரியர்ஸ் அணிக்கு எதிராக கிறிஸ் கெய்ல் 175 ஓட்டங்களை விளாசியது மறக்க முடியாதது என்பதை விட உடைக்கவும் முடியாதது. பிரெண்டன் மெக்கல்லம் முதல் ஐ.பி.எல் தொடரில் விளாசிய 158 ஓட்ட சாதனையை கெய்ல் உடைத்தார். ஆனால் கெய்லை உடைக்க ஆளில்லை. ஐ.பி.எல் வரலாற்றில் அதிவிரைவு சதமானதுடன் அதிகபட்ச ஓட்டமாகவும் மாறியது. 66 பந்துகளுக்கு 175 ஓட்டங்கள் என்பது நெருங்க முடியாத சாதனை.



## இரு ஹெட்ரிக் நாயகன் யுவராஜ் சிங்

யுவராஜ் சிங் ஐ.பி.எல் வரலாற்றில் ஒரு தொடரில் இரண்டு ஹெட்ரிக் சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். 2009ஆம் ஆண்டு ஆர்.சி.பி அணிக்கு எதிராக 3/22 என்று ஹெட்ரிக் எடுத்த யுவராஜ், அதே தொடரில் டெக்கான் சார்ஜர்ஸுக்கு எதிராக பஞ்சாப் பெற்ற ஒரு ஓட்ட வித்தியாச வெற்றியில் ஹெட்ரிக் சாதனை புரிந்தார். ஒரே ஐ.பி.எல் தொடரில் இரண்டு ஹெட்ரிக் சாதனைகளை புரிந்த ஒரே வீரர் ஆவார்.



-ரமணி

# தேசிய, சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளின் அட்டவணை வெளியீடு



Sir Lanka Athletics
Competition Calendar
2021/2022

| Date(s) | Competition | Venue | Country |
|---|---|---|---|
| 2021 | | | |
| 2021 October 30, 31 | Nationals 2021 Stage 2 | Colombo | Sri Lanka |
| 2021 Mid of November | [illegible] | Colombo | Sri Lanka |
| 2021 December 11 | Performance Analysis Test of Nat/Elite pool | Colombo | Sri Lanka |
| 2022 | | | |
| 2022 February 11, 12 | Asian Indoor Championships | Nur-sultan | Kazakhstan |
| 2022 February 11, 12, 13 | 1st Selection Trials for Asian Games | Colombo | Sri Lanka |
| 2022 February 12/13 | Final Selection trials Asian youth Championships & [illegible] | Colombo | Sri Lanka |
| 2022 March 01 - 04 | 4th Asian youth Championships | Kuwait | Kuwait |
| 2022 March 11, 12, 13 | 2nd Selection Trials for Asian Games | Colombo | Sri Lanka |
| 2022 March 18-20 | World Indoor Championships | Belgrade | Serbia |
| 2022 April 08, 09, 10 | Nationals Championships 2022 (Final Trials) | Colombo | Sri Lanka |
| 2022 May | Asian Grand prix | | TBD |
| 2022 May 5-12 | [illegible] | Colombo | Sri Lanka |
| 2022 June [illegible] | [illegible] Asian Junior Championships | | South Korea |
| 2022 June [illegible] | Performance Analysis Test of Nat/Elite pool | Colombo | Sri Lanka |
| 2022 July [illegible] | Fitness trial for commonwealth Games team | Colombo | Sri Lanka |
| 2022 July 15-24 | World Championships | Eugene | USA |
| 2022 August [illegible] | Commonwealth Games | Birmingham | UK |
| 2022 August [illegible] | World Junior Championships | Cali | Colombia |
| 2022 September [illegible] | Fitness trial for Asian Games team | Colombo | Sri Lanka |
| 2022 September 10-25 | Asian Games | Hangzhou | China |

2021-2022ஆம் ஆண்டு வரையிலான தேசிய, சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளுக்கான அட்டவணையை இலங்கை மெய்வல்லுனர் சங்கம் வெளியிட்டுள்ளது. அந்த வகையில் கொரோனா வைரஸ் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட இந்த ஆண்டுக்கான 99ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது அத்தியாயம் ஒக்டோபர் மாதம் 30ஆம், 31ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆசிய இளையோர் மெய்வல் லுனர் தொடர் ஜூன் மாதம் தென்கொரியாவிலும், உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் ஜூலை மாதம் அமெரிக்காவிலும், பொதுநலவாய விளையாட்டு விழா ஆகஸ்ட் மாதம் இங்கிலாந்திலும், ஆசிய விளையாட்டு விழா செப்டெம்பர் மாதம் சீனாவிலும் நடைபெறவுள்ளன.

2022ஆம் ஆண்டுக்கான தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் ஏப்ரல் 8, 9 மற்றும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் மே மாதம் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11, 12ஆம் திகதிகளில் ஆசிய உள்ளக மெய்வல்லுனர் தொடர் கஸகஸ்தானில் நடைபெறவுள்ளதுடன், அதே மாதம் ஆசிய விளையாட்டு விழாவுக்கான தகுதிகாண் போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இறுதிப் பந்தில் CLP சம்பியனான 'செயின்ட் கைட்ஸ் அண்ட் நெவிஸ் பெட்ரியட்ஸ்'




மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற கரீபியன் ப்ரீமியர் லீக் தொடரின் சம்பியனாக டுவைன் பிராவோ தலைமையிலான செயின்ட் கைட்ஸ் அண்ட் நெவிஸ் பெட்ரியட்ஸ் அணி தெரிவானது. இதன் மூலம் அந்த அணி முதல் தடவையாக கரீபியன் ப்ரீமியர் லீக் தொடரில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

9ஆவது கரீபியன் ப்ரீமியர் லீக் தொடரின் சம்பியனை தீர்மானிப்பதற்கான மாபெரும் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் செயின்ட் கைட்ஸில் ஆரம்பமானது. அண்ட்ரூ பிளட்சர் தலைமையிலான செயிண்ட லூசியா கிங்ஸ் அணியும், டுவைன் பிராவோ தலைமையிலான செயின்ட் கைட்ஸ் அண்ட் நெவிஸ் பெட்ரியட்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பிளட்சர் தலைமையிலான செயிண்ட் லூசியா கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 159 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிவைன் பிராவோ தலைமையிலான அணியின் வெற்றிக்கு இறுதி இரு ஓவர்களில் 21 ஓட்டங்கள் தேவையாக இருந்தது. இறுதிப்பந்தில் ஒரு ஓட்டம் தேவைப்பட்டது.

மிகச் சிறப்பாக ஆடிய டொமினிக் டிரேக்ஸ் 24 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து செயின்ட் கைட்ஸ் அண்ட் நெவிஸ் பெட்ரியட்ஸ் அணிக்கு இறுதி பந்தில் கிண்ணம் வென்று கொடுத்தார்.

